வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.07.2022 சனிக்கிழமை | இதழ் : 208 | பக்கங்கள் : 16

# சர்வகட்சி அரசை அமைக்குக; இல்லையேல் தேர்தல் நடத்துக!

## ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்!

- 22ஆம் திருத்தத்தை உடன் அமுல் செய்க
- அரசுக்கு வழிகாட்டுவதற்கு பேரவை
- அமைச்சரவையில் 15 பேருக்கே இடம்
- எம். பிக்கள், அமைச்சர்களின் சலுகை ரத்து

கொழும்பு, ஜூலை 02

**உண்மையான சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அரசமைப்பின் 22ஆம் திருத்தத்தை உடன் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர் மகா நாயக்க தேரர்கள்.**

அத்துடன், சர்வகட்சி அரசாங்கத்தை 6 மாதங்களுக்குள் அமைக்க வேண்டும். அந்த அரசாங்கம் நிலைத்திருப்பில் வெற்றி பெற்றால், சகல கட்சிகளின் தலைவர்களின் ஒப்புதலுடன் 12 -18 மாத காலத்துக்கு அரசாங்கத்தை நீடிக்கலாம். இல்லையென்றால் புதிய அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நான்கு மகாநாயக்க தேரர்கள் கூட்டாக ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். 10 அம்சங்களைக் கொண்ட அந்தக் கடிதத்தில்,

பொது மக்களின் நலனுக்காக சகல கட்சிகளின் தலைவர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒன்றிணைவது புத்திசாலித்தனமானது. அத்துடன், பின்வரும் 10 அம்சங்களுக்கு ஜனாதிபதி மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் உடன்பட வேண்டும்.

15

## குருநகர் மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 02

ஊர்காவற்றுறை கடலில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஐஸ்பழ வீதி, குருநகரை சேர்ந்த திரகரி நைனாஸ் (வயது 57) என்பவராவார்.

தனது கடற்றொழில் உபகரணங்களை சரி செய்த பின்னர் கடலுக்கு செல்ல முற்பட்டவேளை அவர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு மீனவர் அந்த இடத்துக்கு சென்றபோது, சடலத்தை கண்டுள்ளார். அவர், ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைய

15

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான

## ஆள்கொணர்வு வழக்கு; செப். 15ஆம் நாள் தீர்ப்பு

வவுனியா, ஜூலை 02

இறுதிப் போரில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 15ஆம் திகதி வழங்கப்படவுள்ளது என்று சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

அனந்தி சசிதரன் உள்ளிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாக்கல் செய்திருந்த இந்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட

15

## 10 வகை அவசிய மருந்துகள் ஒரு வாரத்துக்கே போதும்!

கொழும்பு, ஜூலை 102

10 வகையான அத்தியவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளின் இருப்பு ஒரு வாரத்துக்கு மாத்திரமே போதுமானவையாக உள்ளன. சகல வைத்தியசாலைகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் விலங்குகள் கடித்தால் போடப்படும் விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தும் போதியளவில் இல்லை என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ள நோயாளிகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசியும் ஒரு வாரத்துக்கு மாத்திரமே போதும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இலங்கைக்கு அத்தியாவசிய

15

## அரசின் இனவாத செயல்களால் சர்வதேசம் கோபமடைந்துள்ளது

### எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 02

“இனவாதத்தை எப்போதும் தமது பிழைப்புக்காகப் பயன்படுத்தும் குழுக்கள் நாட்டுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தி வருகின்றன. தற்போதைய அரசுடன் உலகின் பல நாடுகள் கோபமடைந்துள்ள

15

## வட மாகாண பாடசாலைகளை தொடர்ந்து இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 02

வடக்கு மாகாண பாடசாலைகளை தொடர்ந்தும் இயங்கச் செய்வதுதொடர்பில் மாகாண ஆளுநருடன் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற பாடசாலைகளில் வருகை தரக்கூடிய குறைந்தபட்ச ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்துதல்.

ஏனைய அனைத்து பாடசாலைகளிலும் இந்த

15

## ஊழியர்கள் தொழில்சங்க போராட்டம் கோட்டை ரயில் நிலையத்தில் பதற்றம்!

### காங்கேசனுக்கான தொடருந்தும் தாமதம்!

கொழும்பு, ஜூலை 02

முன்னுரிமை அடிப்படையில் தமக்கு எரிபொருள் வழங்க வேண்டும் என்று கோரி நேற்று தொடருந்து தொழில் சங்கத்தினர் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரு மணித்தியாலம் தொடர்ந்த இந்தப் போராட்டத்தால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதுடன், கோட்டை புகையிரத நிலையத்தில் பதற்றநிலையும் காணப்பட்டது.

இதேசமயம், இந்தப் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தால் கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான தொடருந்தும் 2 மணி நேரம் தாமதமானது.

தொடருந்து சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டாலும் தொடருந்துகளை இயக்க மாத்திரம் எரிபொருள் வழங்கினால் மட்டும் போதாது. ஊழியர்கள் பணிக்கு சமுகமளிக்க எரிபொருள் வசதி செய்து கொடுக்க வேண்டும். அதி

15

## ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தின் பின்பே இலங்கைக்கு ஜப்பான் உதவிகள் அளிக்கும்!

### கூட்டமைப்புடனான சந்திப்பில் தூதுவர் தெரிவித்தாராம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னரே, இலங்கைக்கு ஜப்பான் உதவிகளை அளிக்கும் என்று ஜப்பான் தூதுவர் எச். ஈ. மிஷுகோஷி தெரிவித்தார் என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரான த. சித்தார்த்தன் எம்.பி.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த ஜப்பான் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்துப் பேசினார். இதன்போது அவர்களிடம், “இலங்கைக்கான நிதியுதவி தவறாக நிர்வகிக்கப்படும் அபாயம் இருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் ஜப்பான்

15

## யாழ். விமான நிலைய சேவை நேற்று ஆரம்பிக்கப்படவில்லை!

### இந்திய தரப்பில் சிக்கல் என்கிறார் டக்ளஸ்!

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்திலிருந்து தமிழகத்துக்கான விமான சேவை நேற்று ஆரம்பிக்கப்படாததற்கு இந்திய தரப்பில் எழுந்த எரிபொருள் பிரச்னை, சட்ட சிக்கல்களே காரணம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

எரிபொருள் கப்பல்கள் இலங்கையை நோக்கி வந்து கொண்டிருப்பது குறித்து நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அரசாங்கத்துடன் தொடர்பிலுள்ள ஒவ்வொருவரும் தத்தமக்கு தெரிந்தவற்றை மக்களுக்கு அறிவித்துக் கொண்டிருப்பதைப் பற்றியும், அதனை மக்கள் இப்போது நம்புவதாக இல்லை என்பதையுமே அதில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்தப் பத்தியை இப்போது சில சிங்கள நண்பர்களும் படிக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்ற விடயம் நேற்றுத்தான் தெரியவந்தது.

அவர் ஒரு சிங்கள ஊடகவியலாளர், அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தப் பத்தி பற்றி கூறியபோது, இந்த ஊர்க்குருவிக்கு ஆச்சரியம். எப்படி படித்தீர்கள் என்று கேட்டேன்.

எல்லாம் இந்த கூகுளின் உதவிதான் என்றார்.

கூகுள் நிச்சயமாக சரியாக மொழிபெயர்த்திருக்காது என்பது எனக்கு தெரியும். ஏனெனில், அவரும் அடிக்கடி சிங்களத்தில் வரும் செய்திகளை எனக்கு அனுப்புவதுண்டு. அதனை நான் கூகுளின் துணையோடு படித்து அதிலிருந்து சில தகவல்களை சுழியோடுவதுண்டு. அப்படி சுழியோடி எடுத்தால் கூகுளின் மொழிபெயர்ப்பு சரிதானா என்று பரீட்சிப்பதற்காக அவருடனே பேசி அறிந்துகொள்வது அவ்வப்போது நடக்கின்ற நிகழ்ச்சி.

சரி, எமது தமிழ் மொழியிலிருந்து கூகுள் மொழிபெயர்ப்பு எப்படி அவருக்குப் புரிந்திருக்கிறது என்று அறிய, நேற்றைய பத்தியை அவர் எப்படி புரிந்துகொண்டார் என்பதை அறிய விபரம் கேட்டேன்.

அப்போது அவர் சொன்னார், நீங்கள் எரிபொருள் கப்பல்கள் வருவது பற்றி அமைச்சர்கள் கூறியதை மக்கள் நம்பிக்கொண்டு காத்திருக்கிறார்கள் என்று எழுதியிருந்தீர்கள். மக்கள்தான் சரி, இன்று வரவில்லை என்றால் நாளை வரும் என்று பொறுத்திருக்கலாம்தானே. இருபத்திரெண்டாம் திகதியும் வரவில்லை என்றால், அதற்குப் பின்னரும் காத்திருக்கலாம். எரிபொருள் இல்லை என்றால் வீட்டில் முடங்கவேண்டிவரும் அவ்வளவுதான். ஆனால், இங்கே எங்கள் விவசாயிகளின் நெல்கதிர்களும் அல்லவா நம்மைப்போல காத்திருக்கின்றன - என்றார்.

எனக்கு எதுவும் புரியவில்லை.

அவரே விளக்கம் சொன்னார், “இந்தியாவிலிருந்து உரம் வந்துவிடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் நெல்லை விதைத்து விட்டார்கள். இந்தா வருகின்றது.. அந்தா வருகின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்களே தவிர உரத்துடன் கப்பல் வந்ததாகத் தெரியவில்லை. அதுதான் சொன்னேன், எங்கள் நெற்கதிர்களும் நம்மைப்போல கப்பல்களுக்காக காத்திருக்கின்றன என்று“ என்றார்.

“எல்லாம் கொஞ்சக் காலம்தானே சீனாவும் ரஷ்யாவும் ஒன்பது பில்லியன் டொலர்களை வழங்கவிருக்கின்றனவென சிங்கள அன்பர்கள்தான் சமூக வலைத்தளங்களில் தகவல் பரப்பிக்கொண்டிருக்கின்றர்களே. ஒன்பது பில்லியன் என்றால் நமது பிரச்னைகள் எல்லாமே சரியாகி விடும்தானே“ என்றேன்.

அவர் “அட நீங்களும் அதனை நம்பிவிட்டீர்களா?“ என்று கேட்டவர் சொன்ன தகவல் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

ஏற்கனவே, ரஷ்யா இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்திருந்தது. பல்வேறு துறைகளில் இரு தரப்பு வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதே அந்த உடன்படிக்கையின் நோக்கம். அந்த உடன்படிக்கையை செய்துகொண்ட பின்னர் ரஷ்யா இலங்கைக்கு முன்னூறு மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியும் இருந்தது. ஆனால், இன்றுவரை இலங்கை அந்த முன்னூறு மில்லியனையும் பயன்படுத்தவே இல்லை. அதாவது அதனை பயன்படுத்துவதெனில் தமக்குத் தேவையானவற்றை ரஷ்யாவிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. இந்த இலட்சணத்தில் ரஷ்யாவிடமிருந்து பல பில்லியன் கடன் கிடைக்கும் என்று நீங்களும் நம்புகின்றீர்களா? என்று கேட்டார் அந்த நண்பர்.

இப்போதுதான் உக்ரைன் மீதான யுத்தம் காரணமாக ரஷ்யாமீது பொருளாதாரத் தடையை விதித்திருக்கின்றது ஐ. நா. அதனால், ரஷ்யாவிடமிருந்து பொருட்களை வாங்கினால், அது ரஷ்யாமீது விதிக்கப்பட்ட தடையை மீறுவதாக இருக்கும். ஆனால், இந்த உடன்படிக்கை கையெழுத்தானபோது அவ்வாறு தடை இருக்கவில்லை. ஆனால், அப்படியிருந்தபோதிலும் இலங்கை அதனைப் பயன்படுத்தவில்லை. அது ஏன் என்பது அந்த நண்பருக்கும் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், இதனாலும் பின்னர் தமது விமானத்தைத் தடுத்து வைத்ததாலும் ரஷ்யா கடுப்பில் இருக்கின்றது என்பது மாத்திரம் அந்த நண்பருக்குத் தெரிந்திருந்தது.!

**- ஊர்க்குருவி**

# நெருக்கடியை பொறுத்துக் கொள்ளுங்கள் விரைவில் திண்ம கழிவுகள் அகற்றப்படும்!

## யாழ். மாநகர சுகாதார குழு தலைவர்

யாழ்ப்பாணம், ஜுலை 02

எரிபொருள் நெருக்கடி காரணமாக யாழ். மாநகர சபை முன்னெடுக்கின்ற திண்மக்கழிவு அகற்றல் செயல்பாடு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதே நேரம் மக்களுக்கு அவசர கோரிக்கை ஒன்றை யாழ். மாநகர சபை சுகாதார குழு தலைவர் வ. பார்த்தீபன் விடுத்துள்ளார்.

“தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி என்பது மக்களை பாதிக்கின்ற அளவுக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் செயல்பாடுகளையும் பாதித்திருக்கின்றது. இதனால், யாழ். மாநகர சபை முன்னெடுக்கின்ற திண்மக் கழிவு அகற்றல் செயல்பாடு மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட 27 வட்டாரங்களுக்கு ஓர் உழவு இயந்திரம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு கழிவகற்றப்பட்ட போதும், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் 9 உழவு இயந்திரங்களே திண்மக் கழிவகற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

இது இடர்கால கழிவகற்றல் முகாமைத்துவத்தை உருவாக்கியுள்ளது. வாரத்துக்கு ஒரு முறையாவது ஒரு வீட்டிற்கு செல்லவேண்டும் என்ற மாநகர முதல்வரின் கோரிக்கைக்கேற்ப புதிய நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடியால் திண்மக் கழிவகற்றலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். கழிவுகளை அகற்ற முடியாத நேரங்களில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட 9 இடங்களில் மக்கள் கழிவுகளை தரம் பிரித்து ஒப்படைக்கின்ற இடங்களாக பிரகடனப்படுத்தி இருக்கின்றோம். ஏதோவொரு வகையில் தங்களுக்கு அருகில் உள்ள இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கழிவுகளை கொடுக்கமுடியும்.

இதனை சில நாட்களில் பத்திரிகை வாயிலாக பகிரங்கப்படுத்துவோம். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செயல்படுத்தப்படவுள்ளது.

எனவே இந்த இடர்கால கழிவகற்றல் முகாமைத்துவதற்காக மக்கள் பூரண ஒத்துழைப்பினை தர வேண்டும். அத்துடன் இயலுமான அளவிற்கு கழிவுகளை குறையுங்கள்.

மேலும் எமது ஊழியர்கள் “பணம் தந்தால் தான் கழிவகற்றுவோம்” என அழுத்தம் கொடுத்தால் அதனை யாழ். மாநகரசபைக்கு அறிவித்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அவ்வாறு பணம் வாங்கியவர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்பட்டு தண்டிக்கப்படுவர். 071-6390000 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொதுமக்கள் தொடர்புகொண்டு இவை தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் - என்றார். (ஐ)

## திருக்கேதீச்சரம் கும்பாபிஷேகம்; 3,4,5இல் எண்ணெய் காப்பு சாத்தல்!

மன்னார், ஜுலை 02

வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல்பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ தியாகராஜ கருணானந்த குருக்கள் தலைமையில் இந்தப் பூசைகள் ஆரம்பமாகின. சாந்தி பூசைகள் தர்மபுர ஆதின முதல்வர் மீனாட்சி சுந்தரம் தம்பிரான், வேத சிவாகம பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாச்சாரியார் ஆகியோர் முன்னிலையில் ஆரம்பமாகின.

தொடர்ந்து இடம்பெறும் கிரியைகளில் பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். 6 ஆம் திகதி புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இந்தியா - இலங்கையை சேர்ந்த சிவாச்சாரியார்களால் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (ஐ)

## அதிகாலை வேளை வாள்வெட்டு; யாழ். நகரில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜுலை 02

தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் மீது இனந்தெரியாத நபர்களால் சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரி எரிபொருள் நிலையத்திற்கருகில் காத்திருந்தபோது பின்புறமாக வந்தவர்கள் அவரை வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அவர், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3)



## சுகாதார துறையினருக்கு புலோலியில் எரிபொருள்!

வடமராட்சி, ஜுலை 02

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு அலுவலகம் ஆகியவற்றை சேர்ந்த சுகாதார மருத்துவ பணியாளர்களுக்கு புலோலி எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக நேற்று எரிபொருள் வழங்கப்பட்டது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் அத்தியாவசிய சேவையினருக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அரசு அறிவித்ததன் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

காலை 7 மணியிலிருந்து காத்திருந்த, சுகாதார துறையினருக்கு முற்பகல் 11:00 மணியிலிருந்து எரிபொருள் நிரப்பப்பட்டது.

வடமராட்சி எரிபொருள் நிரப்பு நிலையத்தை மையத்தப் படுத்தி சுமார் 650 பேர் வரை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட வரிசை யில் காத்திருந்து எரிபொருள் பெற்றுச் சென்றனர்.

மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட அனைவரும் காத்திருந்து எரிபொருள் பெற்றுச்சென்றனர். பருத்தித்துறை 551ஆவது படை பிரிவு பிரி கேடியர் சிந்திக்க விக்கிரமசிங்க ஒழுங்கு படுத்தலில் இராணுவப் பாது காப்புடன் இந்த எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. (ஐ-2)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ. சந்திரசேகர குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
02.07.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## மாகாண சபை தேர்தல்?

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இந்தியா அழுத்தங்களை கொடுக்க வேண்டுமென்று, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரியுள்ளது. ஆனால் அரசாங்கமோ, தேர்தல்களைத் தொடர்ந் தும் பிற்போட்டே வந்திருக்கின்றது. உண்மையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் இருந்தது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசியல் யாப்பு கற்பனைகளில் இருந்தமையால் தேர்தலை நடத்த விரும்பியிருக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவை பொறுத்தவரையில், ஒரு சிங்கள - பௌத்த அரசியல் யாப்பைக் கொண்டுவருவதில் நாட்டம் கொண்டிருந்தார். அந்த யாப்பின் பிரதான இலக்கு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதுதான்.

கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்திலேயே அவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். இதே கருத்தை வெளிப்படுத்திய மிலிந்த மொறகொடவையே, இந்தியாவுக்கான தூதுவராக நியமித்திருந்தார். தான் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளும்போது இந்தியாவின் பக்கத்திலிருந்து வரும் எதிர்ப்புக்கள் அல்லது தலையீடுகளை, மிலிந்த மொறகொடவின் இராஜதந்திரத்தின் மூலம் சரி செய்யலாமென்னும் நம்பிக்கையிலேயே, மிலிந்த மொறகொடவை தூதுவராக நியமித்திருந்தார். காஷ்மீருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகையை மோடி அரசாங்கம் நீக்கியதை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையிலும் தமிழ் மக்களுக்கு விசேட சலுகைகள் வழங்குவதை நிரந்தரமாக இல்லாமல் ஆக்குதல் என்னும் அடிப்படையிலேயே, கோட்டாபயவின் நகர்வுகள் அமைந்திருந்தன. இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தலை நடத்துவதை கோட்டாபய திட்டமிட்டு பிற்போட்டு வந்தார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை தேர்தலை நடத்துமாறு பிரத்தியேக அழுத்தங்களை வழங்கவில்லை. தமிழர் பகுதிகளில், மாகாண சபை தேர்தலை நடத்துமாறு, ஓர் எதிர்ப்பு பேரணி நடத்தப்பட்ட வரலாறில்லை. ஆனால், இந்திய இராஜதந்திரிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலேயே வலியுறுத்தியிருந்தனர். கூட்டமைப்பின் சமஷ்டி கோரிக்கை தொடர்பில் அவர்கள் எதுவும் பேசியதில்லை - ஏனெனில், அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியப் பிரதமர் முதன்முறையாக இலங்கைக்கு விஜயம் செய்தபோது, தனது உரையில், தான் 'கூட்டுறவு சமஷ்டியில்' நம்பிக்கையுள்ளவர் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், 'கூட்டுறவு சமஷ்டி' என்பதால் அவர் எதனை அழுத்திக் குறிப்பிட்டார் என்பதில் தெளிவில்லை. ஒருவேளை, அவர், இந்தியாவில் நடைமுறையில் இருக்கின்ற முறைமையையே குறிப்பிட்டிருக்கலாம். அதற்குத்தான் வாய்ப்புண்டு. ஏனெனில், ஓர் இந்திய பிரதமர், இந்தியாவில் நடைமுறையில் இல்லாத ஒன்றை, பிறிதொரு நாட்டில் வலியுறுத்தமாட்டார். இந்த அடிப்படையில் சிந்தித்தால், இந்திய மாநில ஆட்சி முறைமைக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் வேறுபாடுகள் இல்லையென்றே நிபுணர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். பிரதமர் மோடி, இதனை மனதில் கொண்டே, கூட்டுறவு சமஷ்டியை வலியுறுத்தியிருக்கலாம். ஆனால், விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளாமல் தமிழ்த் தேசிய தரப்புக்கள் பிரதமர் (தாங்கள் கோரிவரும்) சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக இருப்பதாக விளக்கமளிக்க முற்பட்டனர். இந்திய அரசியல் நிபுணர்கள் பலரும் கூட்டுறவு சமஷ்டி முறைமைக்கும் இந்திய மாநில ஆட்சி முறைமைக்குமுள்ள தொடர்புகள் பற்றி அதிகம் எழுதியிருக்கின்றனர்.

எனவே, விடயங்களை தொகுத்து நோக்கினால், மாகாண சபை விடயத்தில், தமிழ்த் தேசிய தரப்புக்கள் உறுதியான ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்திருக்க வேண்டும். ஆனால், வடக்கு - கிழக்கு அரசியல் மேடைகளில் நடந்ததோ வேறு. கஜேந்திரகுமார் அணியினர், 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் சென்றனர். மறுபுறம், தமிழ் அரசுக் கட்சியினர் மேடைகளில் அதற்கு எதிராகப் பேசினர். மொத்தத்தில் மாகாண சபை விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டிய தமிழ்த் தேசிய தரப்புக்களோ - முக்கியமாக கூட்டமைப்பினர் அமைதி காத்தனர். இவ்வாறானதொரு சூழலில்தான், தமிழ் முற்போக்கு கூட்டணி, மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இந்தியாவின் அழுத்தங்களை கோரியிருக்கின்றனர். மாகாண சபை முறைமையில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதில் கருத்துவேறுபாடுகள் இல்லை. ஆனால், அதனை பலப்படுத்தி, அதிலிருந்து - இந்தியாவிலுள்ள முறைமையை நோக்கி செல்லும் வழிவகைகளையே நாம் ஆராய வேண்டும். அதற்கு முதலில் மாகாண சபை இயங்க வேண்டும்.

# இந்திய உதவியும் திருமலை துறைமுகமும்!

அலசுவது இராஜதந்திரி

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியைச் சேர்ந்த ஹிருணிகா பிரேமசந்திர ஒருபுறம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி கொழும்பு நகர வீதிகளில் ஆரப்பாட்டங்களை நடத்திவரும் அதேசமயம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, இந்தியா இலங்கைக்கு வழங்கும் உதவியை திருகோணமலை துறைமுகத்தோடு சம்பந்தப்படுத்தி கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்மூலம் இலங்கையின் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியான லக்ஷ்மன் கிரியெல்லவின் அரசியல் அறிவு மற்றும் அவரின் பிராந்திய ரீதியான கண்ணோட்டம் என்பவை எவ்வளவு குறுகியவையாக இருக்கின்றன என்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இன்றைய நிலையைப் பொறுத்தவரை இந்தியாவே "ஆபத்பாந்தவனாக" இருக்கின்றது. இலங்கையில் கடந்த மே மாதம் பொருளாதார நெருக்கடி பூதாகாரமாக வெடிக்க ஆரம்பித்ததும் இந்தியாவே உடனடியாக உதவிக்கரம் நீட்டியிருந்தது.

தற்போது வரை இந்தியா மூன்று பில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனுதவியாக வழங்கியுள்ளது. இதுதவிர இந்திய மாநிலமான தமிழ்நாடு தனது பங்களிப்பாக கணிசமானளவில் உதவியை வழங்கியுள்ளது. இத்தகைய பின்னணியில் இந்தியா திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றும் வகையிலேயே இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றது என்று லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியாக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தியா பற்றி கூறியுள்ளதை நோக்கும் போது இந்தியா எவ்வளவு தூரம் இலங்கைக்கு உதவிகளை வழங்க முன்வந்தாலும் இந்தியாவை சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் போக்கு தென்னிலங்கையரிடையே நிலவுகின்றது என்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்தியா இலங்கைக்கு இன்று நேற்றல்ல. இலங்கை எப்போதெல்லாம் அரசியல், பொருளாதாரம் மற்றும் இயற்கை அனர்த்தம் சம்பந்தப்பட்ட இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றதோ அப்போதெல்லாம் இந்தியாவே இலங்கைக்கு உடனடியாகவே உதவ முன்வருவதை அறிய முடிகின்றது.

இந்தியாவுடனான நெருங்கிய உறவு என்றுமில்லாத வகையில் மிக அவதானமாகவும் நேர்த்தியாகவும் பேணப்பட வேண்டிய காலகட்டத்திலேயே இலங்கை தற்சமயம் இருந்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி இலங்கையின் இறையாண்மைக்கு இந்தியா அச்சுறுத்தலாக இருக்கின்றது என்ற வகையில் தனது கருத்தை இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது கூறியிருந்தார்.

ஆனால், இலங்கையின் இறையாண்மைக்கு சவால் விடுவதாகவே சீனாவின் தலையீடு காணப்படுகின்றது. கொழும்பு துறைமுக நகரம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இங்கே கடலில் 269 ஹெக்ரெயர்கள் நிலப்பரப்பில் சீனாவால் உருவாக்கப்பட்டு வருகின்ற வர்த்தக மையம் இலங்கையின் புவியியல் பரம்பலையே மாற்றியமைப்பதாக இருக்கின்றது. எனவே, இலங்கையின் இறையாண்மை என்பது புவியியல் ரீதியாகவும் சீனாவினால் கபளீகரம் செய்யடுவதையே சுட்டிக்காட்டுகின்றது. எனவே, இந்தியா இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது அவரின் அரசியல் வங்குரோத்து நிலையையே எடுத்துக் காட்டுகின்றது.




இரண்டாம் உலக யுத்தகாலத்தின்போது எரிபொருளை இராணுவ தேவைகளுக்காக சேமிக்கும் விதத்தில் பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டவையே திருகோணமலை எண்ணெய்க் குதங்களாகும். இலங்கை - இந்திய உறவைப் பற்றியோ அல்லது அமெரிக்க - இலங்கை உறவைப் பற்றியோ குறிப்பிடும் போது தென்னிலங்கை அரசியல்வாதிகள் கையிலெடுக்கின்ற விடயம் திருகோணமலை துறைமுகமும் அதனை அண்டிய எண்ணெய் குதங்களாகவுமே இருக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்ததுமே திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்குமே ஆனால் அந்தக் குதங்கள் இலங்கைக்கு மாத்திரமல்ல. தென்னாசிய பிராந்தியத்துக்கும் தென்கிழக்காசிய பிராந்தியத்துக்கும் எண்ணெய் விநியோகத்தை திருகோணமலையில் உள்ள 103 எண்ணெய் குதங்கள் மூலமாக மேற்கொண்டிருக்க முடியும். இதன்மூலம் இலங்கைக்கு பெருமளவிலான அந்நிய செலாவணியையும் பெற்றிருக்க முடியும். ஆனால், இலங்கையில் இருக்கின்ற வளங்களை சரிவரப் பயன்படுத்த முடியாமலும் அவற்றை பயன்படுத்த முன்வருவோரை கடுமையாக விமர்சித்தும் வருகின்ற தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கு விசித்திரமானதாகவே இருக்கின்றது.

இன்றைய இந்தியா, ஒரு முக்கிய பொருளாதார வல்லரசாகும். இந்நிலையில் இலங்கையின் பொருளாதார ரீதியான ஈடேற்றம் ஓர் எட்டாக்கனியாக இருக்கின்ற தருணத்தில் இந்தியா இலங்கைக்கு உதவுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அத்துடன், இலங்கையுடனான தொடர்புகள் குறித்து இந்தியாவை சீண்டுவது இலங்கைக்கு எவ்வித பயனையும் தரப்போவதில்லை என்பதையும் குறிப்பாக இலங்கை பொருளாதார ரீதியாக பலம் பெறும் வரை இந்தியா துணைவருவதை தவிர்க்க முடியாதென்பதையும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல உணர வேண்டியவராகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நண்பர்களின் ஒத்துழைப்புடன் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும்.எதிர்பார்த்த நல்ல செய்தி ஒன்று வரும். உங்களின் எண்ணம் ஈடேறும் நாள்.உறவினரால் ஏற்பட்ட சங்கடம் தீரும்.

**இடபம்**
சகபணியாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். நீண்ட நாளாக தள்ளிப்போன செயல் ஒன்று நிறைவேறும். யோகமான நாள்.குடும்பத்தினரின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்**
உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும் நாள். நினைத்ததை முடிப்பீர்கள். மறைமுகத் தொல்லை கொடுத்து வந்தவர்களை கண்டறிவீர்கள்.நீங்கள் விரும்பியதை இன்று அடைவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகளை விலக்குவீர்கள். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் காண்பீர்கள். உங்களது அறிவாற்றல் வெளிப்படும். தடைப்பட்ட செயல்களை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
செலவுகள் அதிகரித்தாலும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மகிழ்ச்சி கூடும்.புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். வழக்கமான செயல்பாடுகளில் ஆதாயம் உண்டு.

**கன்னி**
நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்பு முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த வரவு உண்டு. நண்பர்களுக்காக செலவு செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**துலாம்**
முயற்சிகள் இழுபறியாகும். நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் மாறக்கூடும்.பிறரை அனுசரித்து சென்று ஆதாயம் அடையும் நாள். கோபத்தைத் தவிர்க்கவும். நண்பர்கள் ஆதரவாக இருப்பர்.

**விருட்சிகம்**
உங்களுடைய பணிகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். யோசித்து செயல்படவும். முயற்சிகள் வெற்றியாகும். நீங்கள் விரும்பியவற்றை அடைவீர்கள். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வீர்கள்.

**தனுசு**
உங்களது செயல்களில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். விழிப்புடன் செயல்படவும்.உங்களுடைய ஆதரவாளர்களும் எதிராவார்கள். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.அலைச்சல் அதிகரிக்கும்.

**மகரம்**
புதிய முயற்சிகளில் சாதகமான நிலை உண்டாகும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். உங்களின் எண்ணம் ஒன்று நிறைவே றும். உங்களை விமர்சனம் செய்தவர்களும் பாராட்டும் நிலை உண்டாகும்.

**கும்பம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் உங்களது எண்ணத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இழுபறியாக இருந்த செயல்கள் இன்று முடிவிற்கு வரும்.

**மீனம்**
குடும்பத்தில் சில சலசலப்புகள் உண்டாகும். பேச்சில் கவனம் தேவை.சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும். பழைய இருப்பிடத்தை மாற்றி அமைப்பீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

# சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் இளைஞரை விடுதலை செய்க

## பழ. நெடுமாறன் முதல்வரிடம் கோரிக்கை

தஞ்சாவூர், ஜூலை 02

சிறப்பு முகாம்களில் பல ஆண்டுகளாக அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ. நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழ் இளைஞர்கள் பலரை விடுதலைப் புலிகள் எனக் குற்றஞ்சாட்டி வழக்குகள் தொடுக்கப்பட்டு திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் தண்டனைக் காலம் முடிந்த பிறகும் விடுதலை செய்யப்படாமல் சிறையிலேயே வைத்திருக்கின்றமையைக் கண்டித்து சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். ஒரு இளைஞர் தீக்குளித்து தற்கொலை செய்வதற்கு முயற்சி செய்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இலங்கையில் போர் முடிந்து விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒழித்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளில் இந்த இயக்கத்தின்மீது விதிக்கப்பட்ட தடை விலக்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் மட்டுமே இந்தத் தடை இன்னமும் நீடிக்கிறது. இந்தியாவில் செயல்படாத விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தைக் காட்டி வழக்குகள் தொடுக்கப்பட்டு சிறப்பு முகாம்களில் ஈழத் தமிழ் இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ள அநீதிக்கு முற்றுப்புள்ளி வைத்து, சிறப்பு முகாம்களில் பல்லாண்டு காலமாக அடைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் இளைஞர்களை முதல்வர் விடுதலை செய்ய வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# பினாமி பெயரில் சசிகலா வாங்கிய 55 கோடி ரூபாய் சொத்து முடக்கம்!

சென்னை, ஜூலை 02

பினாமி பெயரில் வாங்கப்பட்ட சசிகலாவின் சுமார் 55 கோடி இலங்கை ரூபாய் (15 கோடி இந்திய ரூபாய்) மதிப்பிலான சொத்துக்களை வருமானவரித் துறை முடக்கியது.



சசிகலாவின் பினாமி பெயரில் வாங்கப்பட்ட சென்னை தியாகராயநகர், பத்மநாபா தெருவில் இருக்கக்கூடிய ஆஞ்சநேயா பிறிண்டர்ஸ் என்ற நிறுவனத்தின் சொத்துக்களை வருமானவரித் துறையினர் முடக்கினர். இந்த சொத்தின் மதிப்பு 15 கோடி இந்திய ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு சசிகலா மற்றும் அவரது உறவினர்களின் வீடுகள் உட்பட 180-க்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். இந்த சோதனையின் போது, பல்வேறு முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதன் அடிப்படையில் முதற்கட்டமாக சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமாக சென்னை, கோவை மற்றும் புதுச்சேரியில் உள்ள சொத்துக்களை வருமானவரித்துறையினர் முடக்கினர்.

பின்னர் இரண்டாவது கட்டமாக, சசிகலா தரப்பினர் 2003-2005ஆம் ஆண்டுகளில் வாங்கிய சொத்துக்களை வருமானவரித் துறையினர் முடக்கினர். சென்னை போயஸ் கார்டன், தாம்பரம், ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள சொத்துக்களை வருமானத் துறையினர் முடக்கியிருந்தனர்.

மூன்றாவது கட்டமாக, சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெயரில் சென்னைக்கு அருகே உள்ள சிறுதாவூர் நிலம் மற்றும் நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட் நிலம் என மொத்தம் சுமார் 1,100 ஏக்கர் நிலங்கள், பினாமி தடுப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டன.

இதில், கொடநாடு எஸ்டேட்டின்மதிப்பு, 1,500 கோடி மற்றும் சிறுதாவூர் நிலத்தின் மதிப்பு 500 கோடி இந்திய ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# "மத அடிப்படைவாதம் என்பது இருபுறமும் கூர்மையுள்ள கத்தி"

சென்னை, ஜூலை 02

"மத அடிப்படைவாதம் என்பது இரு புறமும் கூர்மையுள்ள கத்தி போன்றது என்பதை மதவெறியர்கள் யாராக இருந்தாலும் உணர வேண்டும். சகிப்பின்மையையும், வெறுப்பு அரசியலையும் வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டி வீழ்த்த வேண்டும்" என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் முகமது நபிகள் நாயகத்தை இழிவு படுத்திப் பேசிய பா. ஜ. க. தேசிய செய்தி தொடர்பாளர் நுபுர் சர்மாவைக் கண்டித்து உலகின் அனைத்து இஸ்லாமிய நாடுகளும் கொதித்து எழுந்தன. இந்தியா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கோரின.

பன்னாட்டு அளவில் கடும் கண்டனங்கள் எழுந்ததால் பா. ஜ. கவிலிருந்து நுபுர் சர்மா நீக்கப்படுகிறார் என்று அந்தக் கட்சி அறிவித்தது. ஆனால், அவரை கைது செய்யவோ, சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவோ அரசு முன்வர வில்லை.

ஆனால், நுபுர் சர்மா இறைதூதர் நபிகள் பற்றி பேசிய கருத்தையும், அதனை ருவிட்டரில் ஆதரித்து பதிவு செய்த டில்லி பா. ஜ. க. செய்தி தொடர்பாளர் நவீன்குமார் ஜிண்டால் பற்றியும் இணையதள செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த முகமது ஜூபைர், ருவிட்டரில் பதிவு செய்து வெளிப்படுத்தியதால், அவர் மீது வழக்கு தொடர்ந்து கைது செய்துள்ளது டில்லி பொலிஸ்.

உலக அரங்கில் இந்தியாவுக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்திய நுபுர் சர்மாவைச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்த பா. ஜ. க. அரசு, ஊடகவியலாளர் என்ற முறையில் அவரின் விமர்சனத்தை மக்கள் கவனத்துக்குக் கொண்டு வந்த முகமது ஜூபையர் கைது செய்யப்பட்டு இருப்பது கண்டிக்கத்தக்கது ஆகும்.

ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புகள் செய்வதைப்போல உதய்பூரில் கன்னையா லால் தலையை வெட்டி, அதை பகிரங்கமாக சமூக வலைதளங்களில் பதிவேற்றி இருக்கும் கொடூரம் கடும் அதிர்ச்சி அளிக்கிறது. இதுபோன்ற பயங்கரவாத நடவடிக்கைகளை ஒருபோதும் இந்நாட்டில் அனுமதிக்க முடியாது. இச்செயலை பல இஸ்லாமிய அமைப்புகள் கண்டனம் செய்து இருப்பது ஆறுதல் தருகிறது.

மத அடிப்படை வாதம் என்பது இருபுறமும் கூர்மையுள்ள கத்தி போன்றது என்பதை மத வெறியர்கள் யாராக இருந்தாலும் உணர வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# இனியும் அரசில் தங்கியிராது சுதந்திராமாக செயல்படுங்கள்!

## மக்களிடம் கோருகிறார் ரட்ணஜீவன் கூல்

யாழ்ப்பாணம், ஜுலை 02

**இனியும் அரசாங்கத்தில் தங்கி இருக்காது பொதுமக்கள் சுதந்திரமாக செயல்பட முன்வரவேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் பேராசிரியருமான ரட்ணஜீவன் கூல் தெரிவித்தார்.**

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி தலை தூக்கி உள்ளது. இதன் காரணமாக அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் அனைத்தையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்காது வெளியில் சுதந்திரமாக எமது அன்றாட செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக மின்சாரத்தை எதிர்பார்க்காது கிணற்றில் வாளியில் அள்ளி குளிக்க வேண்டும். அதேபோல் எரிபொருளை எதிர்பார்க்காது நாங்கள் முன்னர் ஒரு காலத்தில் எவ்வாறு பயணம் செய்தோமோ அதே போல் சைக்கிள்களை பாவித்து எமது பயணங்களை மேற்கொள்ளலாம்.




ஆனால் இன்றும் அரசாங்கத்தை எதிர்பார்த்து இருக்கின்றோம். அவ்வாறான நிலையை இனியும் எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக சமுர்த்தி என்ற ஒரு விடயத்தை பார்ப்போமாக இருந்தால் சமுர்த்தி அனைவருக்கும் வேண்டும் எனக் கோரி வருகின்றோம். சாதாரண குறைந்த வருமானம் உள்ளவருக்கு சமுத்தி வழங்கப்படுகின்றது. ஆனால் ஒரு கடையின் முதலாளியாக உள்ளவர் தனக்கும் சமுர்த்தி வேண்டும் எனக் கேட்கின்றார்.

எனவே இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவ்வாறு மாற்றம் ஏற்படாதவிடத்தில் நாம் இன்னும் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வரும்-என்றார். (அ)

# 32 இலட்சம் குடும்பங்களுக்கு 7500 ரூபா நிவாரணத் திட்டம்

கொழும்பு, ஜுலை 02

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 32 இலட்சம் குடும்பங்களுக்கு அதிகபட்சமாக தலா 7500 ரூபா வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 3.2 மில்லியன் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் உதவிகளை பயன்படுத்தி இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன கூறினார்.

"பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சுமார் 3.2 மில்லியன் குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும்.

இந்தத் திட்டம் ஜுலை மாதம் தொடங்கி அடுத்த ஆறு மாதங்களுக்கு செயல்பாட்டுக்கு வரும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக ரூ.7,500 வழங்கப்படும். உலக வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர்களையும் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது, குறித்த தொகை இந்த நிவாரண திட்டத்திற்கு பயன்படுத்தப்படும்"-என்றார் அமைச்சர். (அ)

# 22 ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜுலை 02

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியின் தொடராக 22 ரயில் சேவைகள் இடைநிறுத்தப்படுவதாக ரயில் சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாகவே குறித்த சேவைகள் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் நெருக்கடியால் ஊழியர்கள் வரவு போதாமையே குறித்த நடவடிக்கைக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆடை தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தில்

கொழும்பு, ஜுலை 02

இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.சுமார் 200 சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற் சாலைகள் இவ்வாறு மூடப் படும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்ப டுகின்றது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தடை காரணமாக இவ்வாறு ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் ஐ.ஓ.சீ நிறுவனத் திடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொண்ட போதிலும், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் போக்குவரத்து பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சைக்கிள், உதிரிப்பாகங்கள் கொள்வனவு அதிகரிப்பு!

கொழும்பு, ஜுலை 02

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள் மற்றும் அதன் உதிரிப்பாக கொள்வனவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சைக்கிள் விற்பனை நிலையங்களை மக்கள் அதிகளவில் நாடிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

மக்கள் சைக்கிள் கொள்வனவு செய்வது அதிகரித்துள்ள நிலையில், அதன் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

தற்போதுவரை சாதாரண சைக்கிள் ஒன்றின் விலை, 50 ஆயிரம் ரூபாயைக் கடந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், புதிய வடிவிலான மற்றும் வெவ்வேறு தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட சைக்கிள், ஒரு இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# நாட்டில் விபத்துக்களினால் வருடாந்தம் 12,000 பேர் பலி!

கொழும்பு, ஜுலை 02

நாட்டில் விபத்துக்களால் வருடாந்தம் 12,000 பேர் உயிரிழப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான வயோதிபர்கள் கீழே விழுவதனூடாக விபத்துக்களுக்கு உள்ளாகின்றனர் என்று சுகாதார அமைச்சின் இளைஞர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவின் பிரதான விசேட வைத்திய நிபுணர் ஷிரோமி மதுவகே கூறினார்.

இதில் சுமார் 3,000 பேர் வீதி விபத்துக்களினால் உயிரிழப்பதாக போக்குவரத்து, கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார். (அ)

# கந்தக்காடு முகாமிலிருந்து தப்பியவர்களில் 72 பேர் தொடர்ந்தும் தேடப்படுகின்றனர்!

கொழும்பு, ஜுலை 02

வெலிகந்தை - கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களில் 72 பேர் தொடர்ந்தும் தேடப்படுகின்றனர்.

பொலிஸார், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல்களை முன்னெடுத்து வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றவர்களில் நேற்று முன் தினம் இரவு வரை 653 பேர் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# வைத்தியரின் வாகனத்திலிருந்து எரிபொருள் களவாடியவர் கைது!

கொழும்பு, ஜுலை 02

கண்டி தேசிய வைத்தியசாலை வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைத்தியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலிருந்து எரிபொருளைத் திருடிய ஒருவர் வைத்தியசாலை காவலர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் குறித்த வைத்தியர் மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு வருவதுடன் அன்றும் வழமை போல 28ஆம் இலக்க விடுதிக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்தியசாலைக்குள் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேகநபர் போத்தல் ஒன்றில் மோட்டார் சைக்கிளிலிருந்த எரிபொருளை நிரப்பிக்கொண்டிருந்தபோது, வைத்தியசாலை காவலர்களிடம் கையும் களவுமாக சிக்கியுள்ளார்.

சந்தேகநபர் கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான எரிபொருள் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (அ)

# ரூபா நான்கு கோடி பெறுமதியான புத்தர் சிலையுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுலை 02

தொல்பொருள் பெறுமதிமிக்க தங்கம் என சந்தேகிக்கப்படும் புத்தர் சிலையொன்றை நான்கு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கலன்பிந்துனுவெவ மொறகொட பகுதியில் வைத்து விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலொன்றுக்கமைய மொறகொட பொலிஸ் பிரிவின் மெகொடவெவ பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் பெறுமதிமிக்க புத்தர் சிலையொன்றையும் போர் 12 துப்பாக்கிக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் சிலவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய உணகொள் ளாவ, மெகொடவெவ,மொறகொட பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

புத்தர் சிலையினை கொள்வனவு செய்வதற்காக வேண்டி விசேட பொலிஸ் அதிரடிப் படையினரே மாறுவேடம் பூண்டு சென்றுள்ளனர். (அ)

# ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை வாங்க ஏன் பின்னடிக்கிறது அரசு?

## கேள்வி எழுப்புகின்றார் பெரமுன எம்.பி.

**கொழும்பு, ஜூலை 02**

**ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தவறியது ஏன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர்., பிரதமர் தீர்வை பெறாமல் நெருக்கடி நிலை தொடர்பில் வெறும் கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியாவும் கூட ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்று, இலங்கைக்கு அதிக விலைக்கு பங்குகளை விற்பது அனைவரும் அறிந்ததே.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெறுவது சாத்தியமாகும். ஆனால் பிரதமர் அதற்குப் பதிலாக வரும் வாரங்கள் கடினமாக இருக்கும் என்று அறிக்கைகளை வெளியிடுகிறார்.

சாத்தியமான தீர்வுகளை வழங்காமல் பிரதமர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் போது, பொதுமக்கள் தொடர்ந்தும் வரிசையில் நிற்கின்றனர்.

பொதுமக்கள் அடிமைத் தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை உறுதி செய்ய பிரதமர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதேவேளை, வெளிநாட்டு நாணயங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கான நம்பிக்கையை வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு ஏற்படுத்துவதற்கு நம்பிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

ஒரு வெளிநாட்டவர் மாதந்தோறும் 100 அமெரிக்க டொலர்களை அனுப்பினால், எரிபொருள், மருந்து மற்றும் உரங்களை இறக்குமதி செய்வதற்கு போதுமான இருப்புக்கள் கிடைக்கும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை இராஜதந்திர வழிகளில் ரஷ்யாவுக்கு விளக்கினால், அது ஆதரவளிக்க தயங்காது - என்றார். (அ)

# 177 பவுண் கொள்ளையிட்ட பெண் உட்பட 4 பேர் கைது!

கொழும்பு, ஜூலை. 02

நோர்வூட் நகரிலுள்ள தங்க நகை அடகு பிடிக்கும் நிலையமொன்றை உடைத்து சுமார் 3 கோடி 15 இலட்சம் பெறுமதியுடைய 177 பவுண்களைக் கொள்ளையிட்ட நான்கு சந்தேகநபர்கள், சம்பவம் இடம்பெற்று 6 மாதங்களுக்குப் பின்னர் கைதுசெய்யப்பட்டனர்.

நோர்வூட் நகரப் பகுதியில் வாழும் மூன்று ஆண்களும், பெண்ணொருவருமே ஹற்றன் பொலிஸின், ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதியன்றே கடை உடைக்கப்பட்டு தங்க நகைகள் களவாடப்பட்டன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த கடையில் சுமார் 10 வருடங்களாக வேலை செய்த பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது கைரேகை அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்திய பெண்ணின் கைரேகையும் மீட்கப்பட்ட பொருட்களில் உள்ள கைரேகையும் ஒரே மாதிரியானவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் பின்னர் விசாரணை வேட்டை ஆரம்பமானது. களவாடப்பட்ட நகைகளை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளையிலேயே, சூத்திரதாரிகள் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

54 தங்கச் சங்கிலிகள், 757 தோடுகள், 177 பெண்டனர்கள், 18 வலையல்கள், 1 தங்க நெக்லஸ் உட்பட மேலும் சில தங்க நகைகளே கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

கைதானவர்கள், சட்ட நடவடிக்கைகளுக்காக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.(அ)

# தபால் திணைக்களத்துக்கு ரூபா 20 மில்லியன் நட்டம்!

கொழும்பு, ஜூலை. 02

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சுமார் 400 வெளிநாட்டு தபால் பொதிகள் தேங்கியுள்ளன.

இதனால் தபால் திணைக்களத்துக்கு 20 மில்லியன் ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்காத பட்சத்தில் சேவையில் இருந்து விலகியவர்களாக கருதப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

காரணமாக தபால் சேவை தற்போது செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரமே இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய அரசு வழங்கவுள்ள கடனில் காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்

கொழும்பு, ஜூலை. 02

இந்தியாவினால் வழங்கப்படும் 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பயன்படுத்தி காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இலங்கை எதிர்பார்த்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை துறைமுக அதிகாரசபை பூர்வாங்க வேலைகளைச் செய்துள்ளதாகவும், எக்ஸிம் வங்கி வழங்கும் நிதி வசதியைப் பயன்படுத்தி எஞ்சிய பணிகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஆராய இந்திய தரப்பில் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகரின் அறிக்கை கிடைத்தவுடன் இலங்கையின் வடமுனையில் அமைந்துள்ள துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பணியை முன்னெடுக்கவுள்ளதாக அவர் கூறினார்.

தற்போது சிறிய கப்பல்கள் மட்டுமே நிறுத்த முடியும் என்றும் பெரிய கப்பல்கள் தங்கும் வகையில் இதை உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோதமாக எரிபொருளை சேமித்து வைத்திருந்த 2பேர் கைது!

கொழும்பு, ஜூலை. 02

அரநாயக்க-வெலிமன்ன பிரதேசத்தில் சட்டவிரோதமாக, எரிபொருளை சேமித்து வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி 57 வயதுடைய சந்தேகநபரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 186 லீற்றர் டீசல் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், எதிர்வரும் 5ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சப்புகஸ்கந்தை - மாகொல - இசுரு மாவத்தை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவர் 820 லீற்றர் டீசலுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கட்டார் தொண்டு நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்

கொழும்பு, ஜூலை. 02

கட்டார் தொண்டு நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். கட்டார் தொண்டு நிறுவனத்தின் அதிகாரிகளை சந்தித்தேன். கடந்த 2019 ஆம் ஆண்டு நிறுவனத்திற்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கான தீர்மானத்தை பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் மேற்கொள்ளப்படும் தொண்டு நிறுவனத்தின் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். (அ)

# மாத்தறை, வவுனியா, கண்டியில் ஒரு நாளில் கடவுச்சீட்டு பெறலாம்

கொழும்பு, ஜூலை. 02

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மாத்தறை, வவுனியா மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் ஒரு நாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நிலையங்களை திறக்கவுள்ளதா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், "வெளிநாடுகளுக்கு பணிக்காக செல்வோரின் நலன் கருதி, ஒரு நாளில் கடவுச்சீட்டை வழங்கும் நிலையங்களை பல இடங்களில் தற்போது நாம் திறந்துள்ளோம்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல், மாத்தறை, வவுனியா, கண்டி போன்ற பகுதிகளில் இந்த நிலையங்களை திறக்கவுள்ளோம். எனவே, தூர பிரதேசங்களில் இருந்து பத்தரமுல்லைக்கு எவரும் வரவேண்டியத் தேவை கிடையாது.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள வரிசை யுகத்தினால், சுற்றுலாப்பயணிகள் வருகைத் தரும் வீதம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டியது எமது கடமையாகும். நாம் முதலீடுகளை மீண்டும் நாட்டுக்குள் ஈர்க்க வேண்டும்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நிலையில், இன்னமும் எனது பணிகளை முழுமையாக ஆரம்பிக்க வில்லை.

இருப்பினும். நான் வேலை செய்துக் கொண்டுதான் உள்ளேன்"- என்றார். (அ)

# நாட்டு நிலவரம் குறித்து 06 ஆம் திகதி விவாதம்!

கொழும்பு, ஜூலை. 02

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிரணி கொண்டுவரவுள்ளது.

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன்போது இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல்வேறு காரணங்களுக்காக பாராளுமன்றத்தில் கேட்கப்படாத 50 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் 4ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் பி.ப 3.30 மணி வரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிபொருள், எரிவாயு இறக்குமதியில் ராஜபக்ஷ குடும்பத்தினர் தலையீடு!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 02

**எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி நடவடிக்கைகளில் ராஜபக்ஷ குடும்பத்தின் உறுப்பினர்கள் கடும் தலையீடுகளை மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் 43ஆவது படைப்பிரிவு அமைப்பு நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குற்றம் சுமத்தினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் இந்த தலையீட்டை நிறுத்தவேண்டும். பல்வேறு இடங்களில் பல விதங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு, இலங்கைக்குள் உரிய முறையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள் ஊடாக அதனை செய்ய வேண்டும்-என்றார். (அ)

# முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனங்களில் உள்ள வெளிநாட்டவருக்கு 5 ஆண்டு இலவச வீஸா!

கொழும்பு, ஜூலை 02

முதலீட்டு ஊக்குவிப்புச்சபை நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாட்டவர்களுக்கு, இன்று முதல் 5 ஆண்டுகால இலவச தொழில் வீஸா வழங்கப்படும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா அறிவித்துள்ளார்.

இதன்படி, முதலீட்டு ஊக்குவிப்புச் சபை நிறுவனங்களின் உரிமையாளர், பணிப்பாளர் மற்றும் உயர் முகாமையாளர் ஆகியோருக்கு இவ்வாறு விஸா வழங்கப்படவுள்ளது. (அ)

# நீண்ட வரிசையில் காத்திருப்போருக்கு குடிதண்ணீர் வசதி செய்த இராணுவம்!

யாழ்ப்பாணம், ஜூலை 02

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காகக் காத்திருப்போருக்குக் குடிதண்ணீர் வழங்கும் வகையில் இராணுவத்தினரால் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நீர்த் தாங்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அதனூடாக மக்களுக்குத் தொடர்ந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். தற்போது கடுமையான வெய்யில் காலமாக இருப்பதால் வரிசையில் காத்திருப்பவர்கள் தாகத்துடனேயே அதிக நேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வரிசையில் காத்திருப்போருக்குக் குடிதண்ணீர் வழங்கும் வகையில் இராணுவத்தினர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நீர்த் தாங்கியை வைத்துள்ளனர். (அ)

# மன்னார் சுகாதார உத்தியோகத்தர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்!



மன்னார், ஜூலை. 02

மன்னார் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 11.30 மணி வரை பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் உள்ள சுகாதார சேவையாளர்களுக்கான பிரத்தியேக எரிபொருள் விநியோகம் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படுகின்றபோதும் மன்னார் மாவட்டத்தில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையை கண்டித்தே குறித்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்தில் சுமார் 1200 வரையிலான பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களில் அதிகமானவர்கள் தூர இடங்களில் இருந்து வந்து தமது நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அதனை தொடர்ந்து ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அரச பணியாளர்களை சுழற்சி முறையில் கடமையாற்றுவதற்கும், வீடுகளில் இருந்து கடமையாற்றுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஏனைய சுற்றறிக்கைகளின் படி சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அனைவரும் 7 நாட்களும், 24 மணி நேரமும் கடமையாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

ஆனால் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தற்போது வரிசைகளில் நின்று எரிபொருளை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் படி வெள்ளிக்கிழமை தினங்களில் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் ஏனைய மாவட்டங்களில் உரிய முறையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த வாரமும், இவ் வாரமும் உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமை யை கண்டித்து குறித்த பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பல்வேறு தொழில் சங்கங்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்ததோடு பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது அங்கு சென்ற மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலையில் இருந்து ஊர்வலமாக சுகாதார சேவை பணியாளர்கள் மன்னார் மாவட்ட செயலகம் வரை சென்றனர். தமது கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கும் வகையில் உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். (அ)

# தேங்காய் எண்ணெயின் விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, ஜூலை 02

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பணவீக்கம் போன்றவற்றின் தாக்கம் இருந்தாலும், உள்ளூர் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மொத்த வியாபாரிகளுக்கு தற்போது ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 550 ரூபாவுக்கு வழங்கப்படுவதாக சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி சில்வா தெரிவித்தார்.

நுகர்வோரை பாதுகாப்பதற்காக தொழில் துறையில் பல சவால்கள் ஏற்பட்ட போதிலும் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யானை தாக்கி சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூலை 02

அரலகங்வில வலமண்டிய காட்டுப் பகுதியில் யானை தாக்கியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 19 வயதுடைய இராணுவ சிப்பாய் என தெரியவந்துள்ளது.

இராணுவ பயிற்சிக் குழுவொன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளையில் இந்த காட்டு யானை தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# அத்தியாவசிய உணவு, மருந்து விநியோகத்துக்கு ரயில் சேவையைப் பயன்படுத்த ஏற்பாடு செய்க!

## அமைச்சர் பந்துலவிடம் அங்கஜன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 02

யாழ் - கொழும்புக்கிடையிலான அத்தியாவசிய உணவு, மருந்துப்பொருள் விநியோகத்துக்காக ரயில் சேவையை பயன்படுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் - கொழும்புக்கிடையிலான அத்தியாவசிய உணவு, மருந்துபொருள் விநியோகத்துக்காக தற்போதைய நிலையில் மாற்று வழிகளை ஏற்பாடு செய்து தருமாறு யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.



அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் இதுவரைகாலமும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக ஏராளமான லொறிகளை பயன்படுத்தினர்.

துரதிஷ்டவசமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் லொறிகளை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போதைய நெருக்கடி நிலையானது மேலும் மோசமடைந்து, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களுக்கு போக்குவரத்துக்காக சுமார் பத்து அல்லது பன்னிரெண்டு ரயில் வண்டிகள் தேவைப்படுவதால் அதற்கான செலவை அவர்கள் செலுத்த தயாராக உள்ளனர்.

எனவே இப்பிரச்னையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியப் பொருட்களை புகையிரதம் மூலம் சலுகை விலையில் கொண்டு செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ-02)

# மனிதகுலம் தோன்றியது எப்போது?

## அறிவியல் ஆய்வு சொல்லும் சுவாரசிய தகவல்கள்

லியோ சாண்ட்ஸ்

மனித குலத்தின் மூதாதையர்களின் புதைபடிம எச்சங்கள், ஆராய்ச்சியாளர்கள் முன்பு நினைத்திருந்ததைவிட இன்னும் மிக மிக தொன்மையானவை என புதிய ஆய்வின் வாயிலாக தெரியவந்துள்ளது.

இவற்றில், மனிதகுலத்தின் தொட்டில் என அழைக்கப்படும் தென் ஆப்பிரிக்காவின் குகைகளில் புதைக்கப்பட்டிருந்த “மிஸ்ஸர்ஸ் பிளெஸ்” (Mrs Ples) என அழைக்கப்படும் பண்டைய குகைவாழ் பெண்ணின் புதைபடிம எச்சங்களும் அடக்கம்.

34 லட்சம் முதல் 37 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரம்பகால மனிதர்கள் குழு பூமியில் சுற்றித் திரிந்ததாக, நவீன சோதனை முறைகள் பரிந்துரைக்கின்றன.

இந்த புதிய காலவரிசை மனித பரிணாம வளர்ச்சி குறித்த பொதுவான புரிதல்களை மாற்றியமைக்கக்கூடும்.

இதன்மூலம், நமது முன்னோர்கள் ஆரம்ப கால மனிதர்களாக பரிணமித்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளன.



ஜோஹன்னெஸ்பர்க்குக்கு அருகில் உள்ள ஸ்டெர்க்ஃபோன்டைன் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட ஆஸ்த்ராலோபிதெகஸ் ஆப்பிரிகானுஸ் (Australopithecus africanus) இனத்தின் புதைபடிம எச்சங்கள், 26 லட்சம் ஆண்டுகளுக்கும் குறைவான வயதுடையவை என பல ஆண்டுகளாக ஆராய்ச்சியாளர்கள் நம்பி வந்தனர்.

ஆரம்பகால மனிதர்களின் புதைபடிம எச்சங்கள் உலகிலேயே அதிகமாக இங்குதான் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மிஸ்ஸர்ஸ் பிளெஸ் என பெயரிடப்பட்ட ஆரம்பகால குகைவாழ் பெண்ணின் முழுமையான மண்டை ஓடும் 1947ஆம் ஆண்டில் இங்குதான் கண்டெடுக்கப்பட்டது.

இரண்டு கால்களால் நடக்கக்கூடிய இந்த அழிந்து போன இனம், நவீன கால மனிதர்களைவிட உயரம் குறைவானவை என ஸ்மித்சோனியன் அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது. ஆண் இனம் சுமார் 4 அடி 6 இன்ச் (138 செ.மீ.) உயரமும், பெண் இனம் 3 அடி 9 இன்ச் (115 செ.மீ.) உயரமும் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

ஆரம்பகால மனிதர்களின் மூதாதையர்கள்

ஆனால், நவீன கதிரியக்க கால தொழில்நுட்ப பரிசோதனைகள் மிஸ்ஸர்ஸ் பிளெஸ் மற்றும் அதனை சுற்றி கண்டெடுக்கப்பட்ட புதைபடிம எச்சங்கள், முன்பு நினைத்திருந்ததை விட உண்மையில் 10 லட்சம் ஆண்டுகள் பழமையானவை என தெரியவந்துள்ளது.

புதைபடிமவங்களைச் சுற்றியுள்ள வண்டலைச் சோதித்ததன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் இதனை கண்டறிந்துள்ளனர்.

முன்னதாக ஆஸ்த்ராலோபிதெகஸ் ஆப்பிரிகானுஸ் இனம், 22 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் சுற்றித் திரிந்த நமது முன்னோர்களான ஹோமோஜீனஸ் மனித இனமாக பரிணமித்திருக்க முடியாத அளவுக்கு பழமையானது அல்ல என விஞ்ஞானிகளால் கருதப்பட்டது.



தற்போதைய கண்டுபிடிப்பு, அந்த பரிணாம பாய்ச்சலைச் செய்ய அந்த இனத்திற்கு 10 லட்சம் கூடுதல் ஆண்டுகள் இருந்ததாகக் கூறுகின்றன. மேலும், ஆரம்பகால மனிதர்களின் மூதாதையர்களாக மிஸ்ஸர்ஸ் பிளெஸ் மற்றும் அதனை சார்ந்த இனங்கள் இருந்ததாக இந்த ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

ஆரம்பகால மனிதர்களை தோற்றுவித்த இனமாக நீண்டகாலமாக கருதப்பட்டுவந்த ஆப்பிரிக்காவின் ஆஸ்த்ராலோபிதெகஸ் அஃபாரென்சிஸ் இனத்தைச் சேர்ந்த 32 லட்சம் ஆண்டுகள் பழமையான லூசி எனப்படும் குரங்கு இனத்தின் சமகாலத்தில் ஆஸ்த்ராலோபிதெகஸ் ஆப்பிரிகானுஸ் இனமும் வாழ்ந்துள்ளது.

இந்த புதிய காலவரிசையால், இவ்விரண்டு இனங்களும் தொடர்புகொண்டு இனப்பெருக்கம் செய்திருக்கக்கூடும் எனக்கூறும் ஆராய்ச்சியாளர்கள், மனிதர்கள் எங்கிருந்து வந்தனர் என்ற நம் புரிதலை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளனர், மனித இனத்தின் தோற்றம் அவ்வளவு எளிதான பரிணாம கோட்பாடாக இருக்காது என அவர்கள் கூறுகின்றனர்.

அதாவது, நம்முடைய குடும்ப மரம் ”ஒரு புதரைப் போன்றது,” என, பிரெஞ்சு ஆராய்ச்சியாளரும் இந்த ஆராய்ச்சியில் பங்கெடுத்தவருமான லாரென்ட் பிரகெஸெல்ஸ் கூறுகிறார்.

# சிங்கப்பூர் உணவுப் பற்றாக்குறை:

## எப்படி சமாளிக்கிறது சின்னஞ்சிறு நாடு?

உணவுப் பாதுகாப்பு, விநியோகச் சங்கிலி ஆகியவை குறித்து சாமானியர்களும் பேசத் தொடங்கி உள்ளனர். இவ்வாறு பேச வைத்திருக்கிறது கொரோனா கொள்ளை நோய் நெருக்கடி.

வளர்ந்த நாடுகளிலும்கூட உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் என்று கூறப்படும் வேளையில், சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகள் இத்தகைய சவால்களை எதிர்கொள்வது அவ்வளவு எளிதல்ல.

சாலைகள்தோறும் திறந்தவெளி உணவகங்கள், அவற்றில் பரிமாறப்படும் விதவிதமான உணவு வகைகள், நிறைந்திருக்கும் வாடிக்கையாளர்கள் என்பது சிங்கப்பூரின் அடையாளங்களில் ஒன்றாக இன்றளவும் நீடித்து நிற்கிறது. இந்நிலையில், அந்தத் தீவு நாட்டில் உணவுப் பாதுகாப்பு குறித்த பேச்சும் கவலையும் அதிகரித்துள்ளது.



**இறக்குமதியை நம்பியுள்ள சிங்கப்பூர்**

உலகின் மிகச் சிறிய தீவு நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரில் இயற்கை வளங்கள் மிகவும் குறைவு. இதனால் தனது உணவுத்தேவையை பூர்த்தி செய்துகொள்ள 90 விழுக்காடு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறது. இதற்காக சுமார் 170 நாடுகளைச் சார்ந்துள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக, உலகெங்கும் விநியோகச் சங்கிலியில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பொருட்களின் விலை உயர்வு என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது. அந்த வகையில் சிங்கப்பூரில் உணவுப் பொருட்களின் விலை, ஒப்பீட்டு அளவில், கடந்த ஆண்டைவிட நடப்பாண்டின் ஏப்ரல் மாதம் 4.1 வீதமாகக அதிகரித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் இது 3.3 வீதமாக இருந்தது என சிங்கப்பூர் வர்த்தக, தொழில் அமைச்சகம் தெரிவித்துள் ளது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்யவும் கண்காணிக்கவும் சிங்கப்பூர் உணவு முகமையை கடந்த ஆண்டு அமைத்தது சிங்கப்பூர் அரசு. தற்போது இத்தீவு நாட்டின் உணவு உற்பத்தி பத்து விழுக்காடாக உள்ள நிலையில், அதை 30 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த முகமையின் பணிகளில் ஒன்றாக உள்ளது.

இதையடுத்து, பல்வேறு விதமான பண்ணைகள் தொடங்கி ஹைட்ரோ போனிக்ஸ் வரை அனைத்து வித மான நவீன உத்திகளிலும் முதலீடு செய்கிறது சிங்கப்பூர் அரசு.

**ஏற்றுமதி தடைகளால் கவலைப்படும் சிங்கப்பூர்**

இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகள், உள்நாட்டுத் தேவையை முதலில் ஈடுகட்டும் விதமாக பல்வேறு உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளன. இந்தியாவில் இருந்து கோதுமை ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியான வேளையில், பாமாயில் ஏற்றுமதிக்கு தடை விதித்தது இந்தோனேசியா.

மறுபக்கம், மலேசியாவும் கோழிகளை ஏற்றுமதி செய்ய தடை விதித்தது. சிங்கப்பூருக்கு திடீர் நெருக்கடியை ஏற்படுத்தியது. ஏனெனில், இத்தீவு நாட்டின் கோழிகளுக்கான தேவையில் சுமார் 34 விழுக்காட்டை பூர்த்தி செய்வது மலேசியாதான். 48 வீத கோழிகள் பிரேசில் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

மலேசியாவில் இருந்து புதிதாக கோழிகளை இறக்குமதி செய்ய முடியாவிட்டாலும், ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கோழிகளை வைத்து நிலைமையைச் சமாளிக்கிறது சிங்கப்பூர்.

ஆனால், அந்த கோழிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு வகைகளில் வழக்கமான சுவை இல்லை என வாடிக்கையாளர்கள் புலம்புவதாக உணவகம் நடத்துவோர் தெரிவிக்கின்றனர்.

ஏற்றுமதி, இறக்குமதி விவகாரங்களால் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பும் தவிர்க்க முடியாததாக உள்ளது. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் சமையல் எண்ணெய், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் விலை, முப்பது முதல் 45 விழுக்காடு வரை அதிகரித்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, உணவுகளின் விலையை உயர்த்தாமல் இருப்பது இயலாத காரியம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (09 ஆம் பக்கம் பார்க்க....)

ஈழநாடு



# பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சியாளர்களின் தன்னிச்சையான போக்கும் ஒரு காரணம்!

## 21வது திருத்தம் அவசியம்!

இலங்கையில் அதிபரின் அதிகாரத்தைக் குறைத்து, நாடாளுமன்றத்துக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவதற்கு வகை செய்யும் அரசமைப்பின் 21-ஆவது சட்டத்திருத்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது வரவேற்கத்தக்க முடிவு. இது போன்று, சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதும், அதை ரத்து செய்வதும் இலங்கையில் வழக்கமாகவே இருந்து வருகிறது. இந்த முறை அந்த வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி விழுமானால் இலங்கைக்கு நல்லது.



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்தி வரும் பொதுமக்களின், எதிர்க் கட்சிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகவும் இந்த சட்டத்திருத் தம் இருந்தது. மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து, கடந்த மே 12-ஆம் திகதி புதிய பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்கவும் 21-ஆவது சட்டத்திருத்தம் உள்ளிட்ட அரசமைப்பு சட்ட சீர்திருத்தத்தை வலியுறுத்தி வந்தார். ராஜபக்ச சகோதரர்களுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகவும் அரசமைப்புச் சட்ட சீர்திருத்தம் இருந்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் இந்த சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரக் கூடாது என ஆளும் சிறிலங்கா பெரமுன கட்சியின் ஒரு பிரிவினர் தெரிவித்த எதிர்ப்பையும் மீறி அமைச்சரவை இந்த சட்டத்திருத்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. நாடாளுமன்றத்திலும் இந்த சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்படுமானால் இது சட்டமாக நடைமுறைக்கு வரும்.

இலங்கையில் 1978-ஆம் ஆண்டு முதல் "நிறைவேற்று அதிகாரம்" கொண்ட அதிபர் முறை உள்ளது. நாடாளுமன்றத்தின், பிரதமரின் உத்தரவுகளை ரத்து செய்ய அதிபருக்கு அதிகாரம் உண்டு. கடந்த இருபது ஆண்டுகளில் அதிபரின் அதிகாரங்களைக் குறைக்கும் இரு சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டாலும், அவை திரும்பப் பெறப்பட்டன.

அதிபரின் அதிகாரங்களைக் குறைக்க வகை செய்யும் முதல் நடவடிக்கை 2001-இல் சந்திரிகா குமாரதுங்க அதிபராக இருந்தபோது 17-ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் ஆணையம் போன்ற சுதந்திரமான அமைப்புகளில் அதிபர் தலையிடுவதை அந்த சட்டத்திருத்தம் தடை செய்தது. பொலிஸ் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம் போன்ற அமைப்புகளில் அரசமைப்பு கவுன்சிலின் ஒப்புதலுடன் மட்டுமே நியமனங்களை மேற்கொள்ள அதிபருக்கு அதிகாரம் வழங்கியது.

2010-இல் அப்போதைய அதிபர் மகிந்த ராஜபக்சவால் கொண்டுவரப்பட்ட 18-ஆவது சட்டத்திருத்தம், 17-ஆவது சட்டத்திருத்தத்தின் ஷரத்துகளை மாற்றியமைத்தது. அதன்படி, சுதந்திரமான ஆணையங்கள் அதிபருக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவை. மேலும், ஒருவர் இருமுறை மட்டுமே அதிபராக இருக்கலாம் என்கிற விதிமுறையையும் 18-ஆவது சட்டத்திருத்தம் ரத்து செய்தது.

19-ஆவது சட்டத்திருத்தம் 2015-இல் அப்போதைய அதிபர் மைத்திரிபால சிறீசேனா அரசால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்திருத்தம் அதிபரின் அதிகாரங்களை மீண்டும் குறைத்தது. இப்போதைய பிரதமர் விக்ரம சிங்க அந்த 19-ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட முக்கியக் காரணமாக இருந்தார். அதிபர் நினைத்தால் பிரதமரை பதவியிலிருந்து நீக்க முடியும் என்கிற அதிகாரத்தை 19-ஆவது சட்டத்திருத்தம் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும், அதிபரின் பதவிக் கால வரம்புகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது.

அதிபராக கோட்டாபயவும், பிரதமராக மகிந்தவும் ஆட்சியைக் கைப்பற்றியபோது ராஜபக்ச சகோதரர்களால் 2020 ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20-ஆவது சட்டத் திருத்தம் 19-ஆவது சட்டத் திருத்த ஷரத்துகளை அடியோடு புரட்டிப்போட்டது. அரசமைப்பு கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் அதிபரின் அதிகாரத்தின் மீதான தடையை இந்த சட்டத்திருத்தம் நீக்கியது.



மூத்த நீதிபதிகள் நியமனம் முழுமையாக அதிபரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. மனித உரிமைகள் ஆணையம், தேர்தல் ஆணையம், காவல் ஆணையம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணையம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் அதிபரின் கைகளுக்கு வந்தது.

இப்போது அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள 21-ஆவது சட்டத்திருத்த வரைவு மசோதா, மீண்டும் அதிபரின் அதிகாரங்களைக் குறைக்க வழி செய்கிறது. இதன்படி, அமைச்சர்களும், தேசிய கவுன்சிலுடன் அதிபரும் நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள். சட்டப்பிரிவு 21ஏ, இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தேர்த லில் போட்டியிடுவதை தடை செய்கிறது.

அதிபர் கோத்தபய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையையும் பெற்றவர் என்பதால், அவரைக் குறிவைத்தே இந்த ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது. கடந்த முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்டபோது, தான் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்து விட்டதாக கோட்டாபய கூறினார். ஆனால், அதற்குரிய ஆவணத்தை அவர் தாக்கல் செய்யவில்லை.

அமைச்சரவையில் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள 21-ஆவது சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே அதிபர் கோட்டாபய இந்த அரசமைப்பு சட்ட சீர்திருத்தங்களுக்கு பிரதமரிடம் ஒப்புதல் அளித்திருப்பதால் அதில் சிக்கல் எழாது எனலாம்.

இலங்கைக்கு பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைப்படும் இந்த வேளையில், இந்த அரசமைப்புச் சட்ட சீர்திருத்தங்கள் தேவையா என்றால் தேவை தான். இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சியாளர்களின் தன்னிச்சையான போக்கும் ஒரு காரணம் என்பதால், அதற்கு கடிவாளம் போடுவதற்கு இத்தகைய சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. **(தினமணி)**

---

# சிங்கப்பூர் உணவுப் பற்றாக்குறை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக அண்மையில் தனது உணவகத்தில் பரிமாறப்படும் சில உணவு வகைகளின் விலையை உயர்த்தியபோது வாடிக்கையாளர்கள் அதை ஏற்றுக்கொள்வார்களா என்ற தயக்கமும் அச்சமும் தமக்கு இருந்ததாகச் சொல்கிறார் சிங்கப்பூரில் ஜப்பானிய உணவகத்தை நடத்தி வரும் சியோ.

உணவு வகைகளின் விலையை குறைந்தபட்சம் 20 முதல் 35 விழுக்காடு வரை உயர்த்தினால் மட்டுமே இத்தொழிலில் தாக்குப்பிடிக்கவும் நிலைத்து நிற்கவும் முடியும் என்ற நிலை காணப்படுவதாக சியோ சொல்கிறார். ஆனால், இந்த அளவு விலையை உயர்த்தும் பட்சத்தில், தமது வாடிக்கையாளர்கள் தொடர்ந்து ஆதரிப்பார்களா எனும் சந்தேகம் எழுவதாக அவர் கவலைப்படுகிறார்.

**உணவுப் பண வீக்கத்தின் தாக்கத்தை உணர்கிறது சிங்கப்பூர்**

உணவுப் பண வீக்கத்தின் தாக்கத்தை சிங்கப்பூரர்கள் நன்கு உணர்ந்து வருவதாக பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கொரோனா நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் அனைத்துலக அளவில் உணவுப் பொருட்களின் விலை ஏற்கெனவே அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

இந்நிலையில், உக்ரேன், ரஷ்யா போரின் காரணமாக நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. எனவே, உணவுப் பற்றாக்குறை என்பது அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்கு நீடிக்கும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

சில நாடுகள் உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளன எனில், அதனால் ஏற்படக்கூடிய வெற்றிடத்தை வேறு நாடுகளின் மூலம் நிரப்பிவிட இயலாது என்பதையும் துறைசார் நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ரஷ்யா, உக்ரேன் நாடுகளால் உணவு, உணவுப்பொருள் சந்தையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை வேறு ஏற்பாடுகளின் மூலம் நிரப்ப குறைந்தபட்சம் ஓராண்டு ஆகும் என்கிறார்கள் நிபுணர்கள்.

ஏற்றுமதி தொடர்பாக உக்ரேனுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அனைத்துலக உணவு விநியோகச் சங்கிலிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது ஒருபுறம் இருக்க, உக்ரேன், ரஷ்யா இடையேயான போர் முடிவுக்கு வந்துவிட்டாலும்கூட, உணவுப்பொருட்களின் விலைகள் போருக்கு முந்தைய நிலைக்கு உடனடியாகத் திரும்ப வாய்ப்பில்லை என்பதும் பொருளியல் நிபுணர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எரிபொருள் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆகியன ஏற்கெனவே நிலவும் உணவுப் பற்றாக்குறையையும் உணவுப் பொருட்களின் விலையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பதே இந்நிபுணர்களின் எச்சரிக்கையாக உள்ளது.

உணவுகளின் விலை சுமார் 20 விழுக்காடு வரை அதிகரிக்கும் என உலக வங்கியின் ஆய்வு தெரிவிக்கிறது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய சவாலான சூழ்நிலையில், சிங்கப்பூர் அரசாங்கம் தன் குடிமக்களுக்கான உணவுப் பாதுகாப்பை நல்லவிதமாக உறுதி செய்து வருகிறது என்றபோதிலும், அதன் எதிர்கால நிலை குறித்து இப்போதே கணிக்க இயலாது என நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**கல்வி tv CHANNEL**


● **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

**04.** **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

**கல்வி tv CHANNEL-1**

**02.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**02.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# ஒட்டுமொத்த மக்களையும் ஒரே சவக்குழிக்குள் புதைக்கும் ஜனாதிபதியாக உள்ளார் கோட்டா!

## பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூலை 02

**"2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை முள்ளிவாய்க்காலில் கொன்று குவித்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் ஒரே சவக்குழிக்குள் புதைக்கும் ஜனாதிபதியாகத் திகழ்கின்றார்."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டுக்குச் சாபக்கேடு எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே



அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்தியாவசிய சேவையை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த அத்தியாவசிய சேவைகளுக்குள் உணவு விநியோகம், சுகாதாரம், விவசாயம் என்பன உட்படுத்தப்படுவது அவசியம் என்றாலும் இந்தத் தேவைகளுடன் இணைத்து சிறு வியாபாரிகளும் அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கப்படவேண்டும்.

இன்று சிறு வியாபாரிகள், மீனவர்கள், ஓட்டோ சாரதிகள், கூலித்தொழில் செய்வோர் போன்றோர் அன்றாடம் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது. ஓட்டோ சாரதிகள் ஓட்டோவைத் தவணை முறை அடிப்படையில் வங்கிகளிலும் லீசிங் நிறுவனங்களிலும் பெருமளவு கடனில் பெற்றவர்கள். இவர்களின் தேவை நாட்டுக்கு முக்கியமாகவுள்ள நிலையில் அவர்கள் இன்று தமது குடும்பத்தையே கொண்டு நடத்த முடியாத நிலைக்கு இந்த எரிபொருள் பிரச்னை தள்ளியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மீன்பிடி, விவசாயத்தையே அதிகளவில் நம்பியுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களும் அதிகளவில் இந்த மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றாடம் கூலித்தொழில் ஈடுபடும் மக்கள் தமது தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கான முன்னுரிமை வேலைத்திட்டத்தினை அரச அதிபர் முன்னெடுக்க வேண்டும். என்றார். (அ)

# இடைப்போக நெல் அறுவடைக்கு எரிபொருள் பெற்று தரவேண்டும்!

## மட்டு. விவசாயிகள் அரசிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைப்போக அறுவடை காலம் நெருங்கியுள்ளது. இதனால், அறுவடைக்கான எரிபொருளைப் பெற்றுத்தர அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும். அறுவடை நடைபெற்றால் அதற்கான உத்தரவாத விலையையும் நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாய சங்கங்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

தற்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைப்போக அறுவடைக்கு தயாராகும் வகையில் விளைச்சல்கள் காணப்படுகின்றது. ஆனால், அறுவடைக்கு தேவையான எரிபொருட்கள் கிடைக்காத காரணத்தால் அறுவடையை ஆரம்பிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது வயல்களில் நெற்கதிர்கள் அறுவடைக்கு தயாராகி முற்றி நிலத்தில் விழும் நிலையேற்பட்டுள்ளது. அறுவடையை நாங்கள் ஆரம்பிக்காவிட்டால் பெரும் நட்டம் விவசாயிகளுக்கு ஏற்படும். இடைப்போக செய்கையை மேற்கொள்ளும் போது பெரும் செலவு செய்யப்படவுள்ளது.

அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டால் தமது அறுவடை செய்யும் நெல்லை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவாக முன்னெடுக்கவேண்டும். 64 கிலோ நிறையுடைய ஈர நெல்லு மூடைக்கு 9500 ரூபாயும் காய்ந்த நெல் மூடைக்கு 11,000 ரூபாயும் வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தை மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் எடுத்துள்ளோம்.

ஒரு நிர்ணய விலையை தருமாறு அமைச்சரிடமும் நெல் சந்தைப்படுத்தும் சபையிடமும் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரையில் எந்த விலையும் நிர்ணயிக்கப்படாத நிலையிலேயே இந்த செயற்பாட்டை முன்னெடுத்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ)



# நலிவுற்ற குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு உணவுப்பொதி

மட்டக்களப்பு, ஜூலை.0 2

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவிலுள்ள நலிவுற்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கான உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜாவின் வழிகாட்டலில் நடைபெற்ற நிகழ்வில் நாட்டில் ஏற்படும் பொருளாதார சீரற்ற நிலைமை காரணமாக மிகவும் நலிவுற்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி.எம்.எச். சபூஸ் பேகம், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பி. மகேந்திரன், செரி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் நூறு பிள்ளைகளுக்கான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

# வலையிறவு ஆற்றில் பாய்ந்தது பாரவூர்தி!



வவுணதீவு, ஜூலை 02

மட்டக்களப்பு - வவுணதீவு வலையிறவு பாலம் அருகே பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி வலையிறவு ஆற்றில் வீழ்ந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த வீதியில் இரு பாரவூர்திகள் ஒரே நேரத்தில் பயணித்தபோது , ஒரு பாரவூர்தியை லொறியை மற்றைய பாரவூர்தி முந்திச் செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

வீதியை விட்டு விலகி ஆற்றுக்குள் பாய்ந்த பாரவூர்தி சேதம் அடைந்துள்ளது. எனினும், பாரவூர்தியின் சாரதியும் நடத்துநரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுணதீவு பொலிஸார் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருமலை மருத்துவமனையில் போசன சாலை திறக்கப்பட்டது

திருகோணமலை,ஜூலை 02

திருகோணமலை பொது வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போசன சாலை தேசிய உணவு உற்பத்தி நிலையமாக நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரமவால் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை தள வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஐ. டபிள்யூ. எம். ஜே. விக்ரமரத்னவின் தலைமையில் நடைபெற்றது.

இது மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட நான்காவது தேசிய உணவு உற்பத்தி நிலையமாகும். இதற்கு முன்னர் கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்



களில் இந்த உணவகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தரமான தூய்மையான உணவுகளை வைத்திய சாலைக்கு வருகை தரும் பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த உணவகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உணவு செய்கை முறை தொடர்பில் இரண்டு வருடம் பயிற்சிகளை பெற்றவர்களே இதனை முன்னெடுத்து வருகின்றனர்.

புனர்நிர்மாண வேலைகளை இலங்கை இராணுவத்தின் 22 வது படைப்பிரிவினர் மேற்கொண்டனர். (ஐ)

# அப்தெஸ்லாமுக்கு ஆயுள் தண்டனை!

பாரிஸ், ஜூலை 02

2015 நவம்பர் 13 ஆம் திகதி பாரிஸை அதிரவைத்த பயங்கரவாதத் தாக்குதல்களில் உயிருடன் தப்பிப் பிடிபட்ட முக்கிய இஸ்லாமியத் தீவிரவாதக் கைதியாகிய சலா அப்தெஸ்லாமுக்கு குறைக்க முடியாத ஆயுள் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.



பிரான்ஸின் நவீன வரலாற்றில் மிக நீண்டதும் - அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமாகக் கருதப்படும் இந்த வழக்கு விசாரணை, தாக்குதல் நடந்து சுமார் ஆறு ஆண்டுகளின் பின்னர் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் தொடங்கியது. பாரிஸில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு நீதிமன்ற அறையில் கடந்த ஒன்பது மாதங்களாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு நேற்று முன்தினம் மாலை அறிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களது உறுப்பினர்கள், செய்தியாளர்கள் மாத்திரமின்றி வெளிநாடுகளில் இருந்து வந்த பெரும் எண்ணிக்கையானவர்களும் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட சமயத்தில் நீதிமன்றத்துக்கு வெளியே கூடியிருந்தனர்.

சலா அப்தெஸ்லாமுடன் வேறு 19 பேருக்கும் சிறைத் தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் ஆறு பேர் உயிரிழந்துவிட்டனர் என நம்பப்படுகிறது.

ஐ. எஸ். இஸ்லாமியப் பயங்கரவாத இயக்கத்தினால் திட்டமிடப்பட்டு அதன் கொமாண்டோ அணி ஒன்றினால் பாரிஸ் நகரில் அருந்தகம், உணவகம், தேசிய உதைபந்தாட்ட அரங்கு, மற்றும் பிரபல இன்னிசை அரங்கம் ஆகிய இடங்களில் தொடராகப் பல தற்கொலைக் குண்டு வெடிப்புகளும் துப்பாக்கிச் சூடுகளும் நடத்தப்பட்டன. பிரான்ஷுவா ஹொலன்ட் ஆட்சியில் நடந்த அந்தத் தாக்குதல் சம்பவம் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு பிரான்ஸ் மீது நடத்தப்பட்ட ஒரு போராகக் கருதப்படுகிறது. சுமார் 130 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பல நூற்றுக் கணக்கானோர் காயங்களுக்குள்ளாகினர்.

அப்தெஸ்லாம் தன் மீதான வழக்கு விசாரணைகளின் தொடக்கத்தில் தன்னை ஐ. எஸ். இயக்கத்தின் ஒரு "போர் வீரன்" என்று பிரகடனப்படுத்தியிருந்தார். ஆனால் பின்னர் இடையில் தான் ஒரு கொலைகாரன் அல்லன் என்றும் கொலைகளைச் செய்வது தன்னுடைய நோக்கம் அல்ல என்றும் சாட்சியமளித்திருந்தார். தனக்குக் கொலைத் தண்டனை வழங்குவது அநீதி என்றும் அவர் வாதிட்டிருந்தார்.

தாக்குதல் அணியில் ஏனையோர் கொல்லப்பட்டதும் உயிருடன் தப்பி ஓடிய சலா அப்தெஸ்லாம் தான் அணிந்திருந்த தற்கொலை அங்கியைப் பாரிஸின் புற நகர் ஒன்றில் கைவிட்டுச் சென்றிருந்தார். குண்டுத் தாக்குதலின்போது எவரையும் கொல்வதற்கு விரும்பாததால் தனது தற்கொலை அங்கியை வெடிக்க வைப்பதைத் தவிர்த்தார் என்ற அவரது கூற்றை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

தற்கொலை அங்கி செயலிழந்த காரணத்தி னாலேயே அது வெடிக்க வில்லை என பதை விசாரணை யாளர்கள் ஏற்கனவே கண்டு பிடித்திருந்தனர்.

அப்தெஸ்லாமுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆயுள் சிறைத் தண்டனை பிரான்ஸின் நீதிமன்றம் ஒன்றினால் குற்றச் செயல்களுக்காக வழங்கப்படுகின்ற அதி கூடிய உச்சத் தண்டனை ஆகும். (அ)

# இஸ்ரேல் பாராளுமன்றை கலைப்பதற்கு தீர்மானம்!

### 4 ஆண்டுகளில் 5 ஆவது பொதுத் தேர்தல் விரைவில்

ஜெருசலேம், ஜூலை. 02



இஸ்ரேல் பாராளுமன்றத்தைக் கலைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான தீர்மானம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இஸ்ரேலிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து 4 ஆண்டுகளில் ஐந்தாவது பொதுத் தேர்தல் விரைவில் இஸ்ரேலில் நடைபெறவுள்ளது.

இஸ்ரேல் பாராளுமன்றத்தை கலைக்கும் இறுதிக்கட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 92 எம்.பி.க்கள் வாக்களித்தனர். தீர்மானத்தை எதிர்த்து ஒரு வாக்குகள் கூட பதிவாகவில்லை. அதையடுத்து, தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படுவது அதிகாரபூர்வமாக உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அடுத்த பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வரும் நவம்பர் 01 நடத்தப்படவுள்ளது.அதுவரை, நாட்டின் இடைக்கால பிரதமராக தற்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் யாயிர் லபீட் பொறுப்பு வகிப்பார்.

இஸ்ரேலில் தொடர்ந்து நடைபெற்று வந்த தேர்தல்களில் எந்தக் கட்சியாலும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில், அரபு கட்சிகள் உள்பட எதிரெதிர் நிலைப்பாடுகளைக் கொண்ட கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசு சோதனை முறையில் அமைக்கப்பட்டது.

எனினும், அந்த அரசு அமைக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில், தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் 1996-99 வரை பிரதமராக பதவி வகித்த நெதன்யாகு, 2009 ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து பிரதமராக பதவி வகித்து வந்தார். அவரது தலைமையிலான அரசு தனது 4 ஆண்டுகளை கடந்த 2019 இல் நிறைவு செய்ததைத் தொடர்ந்து, அந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

எனினும், எந்தக் கட்சிக்கும் ஆட்சியமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை கிடைக்கவில்லை. இரண்டாவது முறையாக மீண்டும் அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலிலும் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், ஆளும் கட்சிக் கூட்டணியும், எதிர்க்கட்சிக் கூட்டணியும் இணைந்து தேசிய அரசை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எனினும், அந்த அரசில் பிரதமராகப் பொறுப்பு வகிப்பதில் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும், முக்கிய எதிர்க்கட்சியான புளூ அண்ட் வைட் கட்சியின் தலைவர் பெஞ்சமின் காண்ட்ஸுக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. இதனால், தேசிய அரசை அமைப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்தது.

அதையடுத்து, இஸ்ரேல் வரலாற்றில் முதல்முறையாக, ஓராண்டுக்குள் 3 ஆவது முறையாக 2020-ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலிலும் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல், தேசிய அரசை அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்தன.

அதனைத் தொடர்ந்து, இரண்டே ஆண்டுகளில் 4-ஆவது முறையாக இஸ்ரேல் பாராளுமன்றத்துக்கு 2021 மார்ச் மாதம் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலிலும் யாருக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்கவில்லை.

புதிய அரசை அமைக்க நெதன்யாவுக்கு ஜனாதிபதி ரூவன் ரிவ்லின் அழைப்பு விடுத்தார். எனினும், ஆட்சியமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மையைப் பெற நெதன்யாகு தவறியதால் புதிய அரசை அமைப்பதற்கான வாய்ப்பு முக்கிய எதிர்க்கட்சியான யேஷ் அடீடின் தலைவர் யாயிர் லபீடுக்கு வழங்கப்பட்டது. அவர் யாமீனா கட்சித் தலைவர் நாஃப்டாலி பென்னட்டுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தார்.

இதன்மூலம் பெஞ்சமின் நெதன்யாகுவின் 12 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது. கூட்டணி ஒப்பந்தத்தின் கீழ், பிரதமராக பென்னட்டும் வெளியுறவுத்துறை அமைச்சராக யாயிர் லபீட்டும் பொறுப்பேற்றனர். சுழற்சி முறையில் ஆட்சிப் பொறுப்பு மாற்றியமைக்கப்படும்போது பிரதமராக யாயிர் லபீட் பொறுப்பேற்பதாக இருந்தது.எனினும், கூட்டணி அரசில் எதிரெதிர் சித்தாந்தங்களைக் கொண்ட கட்சிகள் இருந்த நிலையில் கூட்டணியில் உள்பூசல் அதிகரித்து வந்தது. இதனால், பென்னட் தலைமையிலான அரசு பெரும்பான்மை பலம் இழந்தது.

இதனையடுத்தே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும் தீர்மானம் இஸ்ரேலிய பாராளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (அ)

# உக்ரைன் கிழக்கில் அதிகாலை ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்!

கீவ், ஜூலை. 02

உக்ரைனின் கருங்கடல் துறைமுகமான ஒடேசாவுக்கு அருகிலுள்ள அடுக்கு மாடி கட்டடம் மற்றும் ஓய்வு விடுதி மீது ரஷ்யா நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டனர். மேலும் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனின் கிழக்கு தொழில்துறை பகுதியான டான்பாஸில் ரஷ்யா தனது படைகளைக் குவித்துள்ளது. அத்துடன், ரஷ்யா கடந்த இரண்டு வாரங்களாக இந்தப் பகுதிகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை இரட்டிப்பாக்கியுள்ளது.

துல்லியமற்ற சோவியத் கால ஏவுகணைகளை பாதிக்கும் மேற்பட்ட தாக்குதல்களுக்கு ரஷ்யா பயன்படுத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஒரு ஏவுகணை அதி காலை 1 மணியளவில் பில் ஹோரோட்-டினிஸ்ட் ரோவ்ஸ்கி நகரில் உள்ள ஒன்பது மாடி கட்டடத்தை தாக்கியதாக உக்ரேனிய அவசரகால அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் அந்தக் கட்டடத்தில் தீ பரவல் ஏற்பட்டது.



கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. சிலர் இடிபாடுகளுக்கு அடியில் சிக்குண்டுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என ஒடேசா பிராந்திய நிர்வாகத்தின் செய்தித் தொடர்பாளர் செர்ஹி பிராச்சுக் உக்ரேனிய அரசு தொலைக்காட்சியிடம் தெரிவித்துள்ளார்.

மற்றொரு ஏவுகணை ஓய்வு விடுதியைத் தாக்கியது. இதில் ஒரு குழந்தை உட்பட குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஒருவர் காயமடைந்தார் என்று பிராட்சுக் கூறினார்.

### 17 பேர் உயிரிழப்பு!

இதேவேளை, மத்திய உக்ரைன் கிரெமென்சுக் நகரில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்யா கடந்த திங்கட்கிழமை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 59 பேர் காயமடைந்தனர்.

பரபரப்பான வணிக வளாகம் மீது திங்கட்கிழமை இரண்டு ரஷ்ய ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதன்போது வணிக வளாகத்தில் 1,000 க்கும் மேற்பட்டோர் இருந்ததாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறினார்.

ரஷ்யாவிடமிருந்து கண்ணியம் மற்றும் மனித நேயத்தை எதிர்பார்ப்பது பயனற்றது என்பதை அப்பாவிகள் மீதான இந்தத் தாக்குதல் காட்டுவதாக ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். (அ)

# சுருண்டது இலங்கை; ஆஸி. இலகு வெற்றி!



காலி, ஜுலை 02

இலங்கை அணியை இரண்டாவது இனிங்ஸில் 113 ஓட்டங்களுடன் சுருட்டி 10 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி.

இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்றது. கடந்த புதன்கிழமை தொடங்கிய இந்தப் போட்டியில், முதலில் ஆடிய இலங்கை அணி 212 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 321 ஓட்டங்களைக் குவித்தது. இதன் மூலம் இலங்கை அணியை விட 109 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதில், கமரூன் கிறீன் 77, உஸ்மான் கவஜா 71, அலெக்ஸ் காரி 45 ஓட்டங்களைப் பெற்றனர்.

இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு ஆஸியின் சுழல் பந்துவீச்சாளர்கள் அச்சுறுத்தலாக விளங்கினர். பகுதிநேர சுழல்பந்துவீச்சாளர்களையே அவுஸ்திரேலிய அணி கொண்டிருந்தபோதும், இலங்கை வீரர்கள் தடுமாறி வேகமாக விக்கெட்களை பறிகொடுத்தனர்.

திமுத் கருணாரத்ன 23, பதும் நிஸங்க 14 ஓட்டங்களை அதிகபட்சமாகக் குவித்தனர். 22.5 ஓவர்களே தாக்குப்பிடித்த இலங்கை அணி 113 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் அசத்திய நதன் லியோன், ட்ராவிஸ் ஹெட் ஆகியோர் தலா 4 விக்கெட்களை கைப்பற்றினர். மிற்செல் ஸ்வெப்சன் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்த டேவிட் வோர்ண்ர் ஒரு பௌண்ட்ர், சிக்ஸரை விளாசினார். இதன் மூலம் முதல் டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்களால் அவுஸ்திரேலிய அணி இலங்கையை வெற்றி பெற்றது.

போட்டியின் நாயகனாக கமரூன் கிறீன் தெரிவானார்.

(ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் இகாவின் வெற்றி தொடர்கிறது!

லண்டன், ஜுலை 02

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரிலும் இகா ஸ்வியாரெக்கின் வெற்றிப் பயணம் தொடர்கிறது.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில், லண்டனில் நேற்று முன்தினம் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் நடந்தன.

இதில், முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் 6-4, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் போராடி பட்டினாமா கெர்கோவை (நெதர்லாந்து) வெளியேற்றி 3ஆவது சுற்றுக்குள் கால்பதித்தார்.

சர்வதேச ரென்னிஸில் ஸ்வியாரெக் தொடர்ச்சியாக பெற்ற 37ஆவது வெற்றி இதுவாகும்.



## விம்பிள்டன் ரென்னிஸ் சிமோனாவும் வென்றார்

லண்டன், ஜுலை 02

ரென்னிஸ் உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான சிமோனா ஹாலேப் விம்பிள்டன் தொடரில் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லண்டனில் நடக்கும் கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டனில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்றுப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப், பெல்ஜியத்தின் கிறிஸ்ரின் பிலிப்கென்ஸை எதிர்த்து ஆடினார்.

இந்தப் போட்டியில் சிமோனா 7 -5, 6-4 என்ற செற்களில் இலகுவாக வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். இன்று நடக்கும் மூன்றாவது சுற்றுப் போட்டியில் சிமோனா போலந்தின் மக்டெலெனா பிரஸை எதிர்கொள்கிறார். (ஐ)

## இங்கிலாந்து ஒருநாள் அணியின் தலைவராக ஜோஸ் பட்லர் நியமனம்!

லண்டன், ஜுலை 02

இங்கிலாந்து வெள்ளைப் பந்து அணிகளின் தலைவ ராக பிரபல வீரர் ஜோஸ் பட்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2019 உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கி கிண்ணத்தை வென்ற இயன் மோர்கன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து இங்கிலாந்து அணிக்குப் புதிய அணித் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரபல துடுப்பாட்ட வீரரான ஜோஸ் பட்லர், இங்கி லாந்தின் ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். முன்னதாக அவர், 9 ஒருநாள் போட்டிகளுக்கும், 5 இருபது - 20 போட்டிகளுக்கும் தலைமை தாங்கியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரிலி ருந்து இவரின் புதிய பயணம் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)




## மத்தியூஸுக்கு கொரோனா தொற்று

கொழும்ப, ஜுலை 02

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் அஞ்சலோ மத்தியூஸ் கோவிட் -19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் அஞ்சலோ மத்தியூஸ் விளையாடிய நிலையில், அவருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

இதனால், போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் அவர் விளையாடவில்லை என்பதுடன், இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாட மாட்டார் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ஐ)



# யாழ்.மாவட்டத்தில் விவசாய அறுவடைக்கு 1,655,202 லீற்றர் மண்ணெண்ணெய் தேவை!

## பெற்றுத் தருமாறு இந்தியாவிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 02**

**யாழ் மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அறுவடையை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நிலையில், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கான 1,655,202 லீற்றர் மண்ணெண்ணெய் அவசரமாகத் தேவைப்படுகிறது.**

*இவ்விடயம் தொடர்பில் மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்து வரும்நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் அங்கஜன் இராமநாதன் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.*

*அத்துடன் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரின் கவனத்துக்கும் இவ்விடயத்தை அங்கஜன் இராமநாதன் எடுத்துச் சென்றுள்ளார்.*

*குறிப்பாக, இந்தியாவில் இருந்து 300,000 பரல்கள் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அவற்றை யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்த கடிதங்களில், ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இல்லாத நிலையில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். எனவே பயிர்களுக்கான நீர்ப்பாசன செயற்பாடுகளுக்காக யாழ்ப்பாணத்தில் 49 வீத விவசாயிகள் இன்னமும் எரிபொருளுக்காக காத்திருக்கின்றனர்.*

*யாழ். மாவட்ட சிறுபோக அறுவடைக்கு 1,655,202.84 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 84,728.46 லீற்றர் டீசல் உடனடியாக தேவைப்படும் நிலையில் விவசாயிகளின் நலன் கருதி அவற்றை உடனடியாக வழங்க ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.*

*இதேவேளை இவ்விடயம் தொர்பாக விவசாய அமைச்சின் செயலாளருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மகேசன் கோரிக்கை கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.* (அ-2)

# ரயில்களில் நிரம்பிவழியும் பயணிகள்!



*கொழும்பு, ஜூலை. 02*

*கோட்டை ரயில் நிலையத்தில் இன்று பல ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் சேவையில் ஈடுபட்ட ரயில்களில் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*அத்தோடு, ரயில் நிலையத்திலும் பெருமளவிலான மக்கள் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

*நாட்டில் நேற்று அலுவலக சேவைகள் உட்பட 22 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*எரிபொருள் பிரச்னை காரணமாக ரயில் ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.* (அ)

# மரண அறிவித்தல்

## குருசு செபமாலை (ஐயாத்துரை)



**தோற்றம்**
**16 - 07 - 1947**

**மறைவு**
**27 - 06 - 2022**

வவுனியா நேரியகுளத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். குருநகர், பிரான்ஸ் Chelles ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குருசு செபமாலை அவர்கள் 27.06.2022 திங்கட்கிழமை அன்று குருநகரில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான குருசு சந்தாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபமாலை உத்தரியம் (நேசம்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,மரிய சலோமை(அரியமலர்) அவர்களின் அன்புக் கணவரும்,சாந்தன், சாதனா, சுபா, சிந்து, நிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பஸ்டியான்பிள்ளை, செபஸ்டியான் பிள்ளை, மரியாம்பிள்ளை, சாமிநாதன், அந்தோனியாபிள்ளை, ஆசைப்பிள்ளை, ஞானம்மா, விக்டோரியா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பற்றிசியா, கிருபா, ரவி, ஜேமிசன், அருண் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான றோசை, யாக்கோவா மற்றும் தங்கம் காலஞ்சென்றவர்களான றுக்குமணி, சூசையப்பு மற்றும் ரோகிணி, கமலசேகரம், சின்னையாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தேவதாசன் (அரியம்) மற்றும் நிர்மலா, அரசன், நேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், எமல்டா, கனகராசா, காலஞ்சென்ற அழகம்மா மற்றும் டெய் சிராணி ஆகியோரின் சகலனும்,றொக்சன், ஸ்ரெலினா, அபிசனா, ஜெறிசன், ஆரோன், சரோனா, சர்மினா ஆன்சியா, பிரான்சியா, ஜெரோன், ஷரோன், அனயா, மெல்ரோன் அரிஷ்க்கா , அக்ஷிதா, ஆதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.07.2022) சனிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் நேரியகுளம் கப்பலேநீதி மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் வீரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சாந்தன் - மகன்** Mobile : +33651420284 , **கிருபா - மருமகன்** Mobile : +33622590525
**ரவி - மருமகன்** Mobile : +33627686569, **ஜெமிஸ் - மருமகன்** Mobile : +33768682774
**அருண் - மருமகன்** Mobile : +33650011017, **அனற் - பெறாமகள்** Mobile : +94768279020
**மரியசீலன் - மருமகன்** Mobile : +94741218939, **பிரசாந்தன் - மருமகன்** Mobile : +94776977050

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சர்வகட்சி...

01. சர்வகட்சி அரசாங்கத்தை 6 மாதங்களுக்குள் அமைக்க வேண்டும். அந்த அரசாங்கம் நிலைத்திருப்பில் வெற்றி பெற்றால், சகல கட்சிகளின் தலைவர்களின் ஒப்புதலுடன் 12 -18 மாத காலத்துக்கு அரசாங்கத்தை நீடிக்கலாம். இல்லையென்றால் புதிய அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

02. சகல கட்சி அரசின் தலைவராக ஒரு கட்சித் தலைவர் நியமிக்கப்பட வேண்டும். உடன்பாடு ஏற்படாவிடின் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்பற்ற இலங்கையர் ஒருவர் அந்தப் பதவியை ஏற்பதற்கு தேசியப் பட்டியல் மூலம் அவரை பாராளுமன்றுக்கு நியமிக்க வேண்டும்.

03. சகல கட்சிகளின் அரசாங்கத்தின் அமைச்சரவையில் 15 உறுப்பினர்களே இடம்பெற வேண்டும். இதில், நீதிமன்றத்தால் தண்டனைபெற்ற எவரையும் சேர்க்கக்கூடாது.

04. பொருத்தமான மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் உரிய அமைச்சுகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். பாராளுமன்றில் அவ்வாறானவர்கள் இல்லாவிடின் அத்தகைய இலங்கையர்களை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றுக்கு தெரிவு செய்ய வேண்டும்.

05. அனைத்துக் கட்சி அரசாங்கத்துக்கு வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் தேசிய புத்திஜீவிகள் பேரவையை அமைக்க வேண்டும்.

06. தேசிய புத்திஜீவிகள் பேரவை திட்டம், கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு தேசிய கொள்கையாக செயல்படுத்தப்பட வேண்டும்.

07. பொருளாதார நெருக்கடியை களைய தேசிய புத்திஜீவிகள் பேரவை முன்வைத்த முன்மொழிவுகளை மறு ஆய்வு செய்ய சுயாதீனக் குழு நியமிக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகள் நீதித்துறையின் வரம்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தணிக்கை செய்யப்பட வேண்டும். பொதுமக்கள் அறிவதற்காக அவ்வப்போது வெளியிடப்பட வேண்டும்.

08. சர்வகட்சி அரசின் கூட்டுத் தீர்மானங்களுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் கட்டுப்பட வேண்டும்.

09. எம். பிக்கள், அமைச்சர்களின் சலுகைகளை ஒழிக்க வேண்டும். நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

10. தவறான நிர்வாகம் மூலம் நாட்டை அராஜகப் பாதைக்கு இட்டு செல்வதற்கு பதில், பல்தேசிய முகவர் நிலையங்கள் மற்றும் நட்பு நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற முறையான பொறிமுறையை தயாரித்து உதவிகளை நிர்வகிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளன. (ஐ)

## ஆள்கொணர்வு...

சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவிக்கையில்,

யுத்தத்தின் கடைசிப் பகுதியில் சரணடைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இன்று (நேற்று) வழங்கப்படவிருந்த போதிலும் நாட்டின் அசாதாரண நிலை காரணமாக இன்றும் (நேற்றும்) பிற்போடப்பட்டுள்ளது.

இந்த வழக்கானது எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை நாம் தீர்ப்புக்காக காத்திருப்போம் - என்றார். (ஐ)

## யாழ். விமான...

விமான நிலையத்தின் செயல்பாடுகள் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இங்கிருந்து, 2020ஆம் ஆண்டுவரை தமிழகத்துக்கு சேவைகள் இடம்பெற்றன.

இந்நிலையில், கோவிட் தொற்று பரவலால் சேவை நிறுத்தப்பட்டது. இந்த சேவையை ஆரம்பிக்குமாறு பல்வேறு தரப்பினர் கோரிக்கைகளை விடுத்தனர். இந்நிலையில், நேற்று - ஜூலை முதலாம் திகதி முதல் சேவையை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதியளித்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த சிவில் விமான சேவைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவும் ஜூலை 1 (நேற்று) முதல் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

ஆனால், அறிவித்தபடி நேற்று விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தொடர்பு கொண்டு கேட்டபோது,"இந்திய தரப்பில் உள்ள எரிபொருள் பிரச்னை மற்றும் சட்ட சிக்கல்கள் காரணமாக சேவையை ஆரம்பிப்பது பிற்போடப்பட்டுள்ளது", என்று கூறினார். (ஐ)

## ஐ. எம்....

ஆதரவளிக்காது" என்று கூறினாரென தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இந்நிலையில், இதன் உண்மைத் தன்மை குறித்து இந்த சந்திப்பில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரான த. சித்தார்த்தனை ஈழநாடு தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவுவது என்றால் அதற்கு பல படிமுறைகள் - நிபந்தனைகள் உள்ளன. இவற்றை அரசாங்கம் ஏற்று நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நிறைவேறிய பின்னரே ஜப்பானும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்று தூதுவர் தெரிவித்தார்.

அப்படியானால், பொருளாதார நெருக்கடியால் பிரச்னைகளை எதிர்கொள்ளும் நாட்டின் சாதாரண மக்களுக்கும் ஜப்பான் உதவாதா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர்.

இதற்கு ஜப்பான் தூதுவர், "மக்களுக்கான உதவிகளை ஜப்பான் தொடர்ந்து வழங்கும். ஆனால், இலங்கைக்கான உதவிகளை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரே வழங்கும்", என்று கூறினார் என்றும் சித்தார்த்தன் தெரிவித்தார். (ஐ)

## ஊழியர்கள்...

காரிகள் இது குறித்து அக்கறை செலுத்தவில்லை என்று தெரிவித்தே நேற்று இரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தால், நேற்றுப் பகல் கோட்டை, மருதானை ஆகிய ரயில் நிலையங்களில் இருந்து இடம்பெறும் தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. அத்துடன், கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி புறகப்படவிருந்த தொடருந்து இரு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டதாக கோட்டை ரயில் நிலைய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேசமயம், தொடருந்து சேவை இரத்து செய்யப்பட்டமை மற்றும் தாமதமடைந்த காரணத்தால் கோட்டை புகையிரத நிலையத்தில் நேற்று அமைதியற்ற தன்மை நிலவியது. தொடருந்து சேவைக்காக காத்திருந்த பயணிகள் பலரும் ரயில் ஊழியர்களின் இந்தப் போராட்டத்துக்கு தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தியிருந்தனர். (ஐ)

## குருநகர் மீனவர்...

டுத்து, சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாட்டை சீரழித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய!

## மைத்திரிபால கடும் விசனம்

கொழும்பு, ஜூலை. 02

"பொய் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று நாட்டைச் சீரழித்துவிட்டார்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை என அறிவிப்பு விடுத்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அந்த உறுதிமொழியை மீறிவிட்டார்.

எனது ஆட்சியின்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது எனச் சுட்டிக்காட்டினர். தாங்கள் ஆட்சிப்பீடமேறினால் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை எனவும் அறிவிப்பு விடுத்தனர். ஆனால், இன்று என்ன நடக்கின்றது?

தற்போதைய அரசு சர்வகட்சி அரசு கிடையாது. அதன் மூலம் சர்வதேச ஆதரவைப் பெற முடியாது" - என்றார். (அ)

# ஊழல் மிகுந்த அரசு பதவி விலகவேண்டும்

## சட்டதரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 02

கொழும்பு - புதுகடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் அரசாங்கத்துக்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது கொழும்பு புதுகடை நீதிமன்ற வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை வங்கி மாவத்தை வரை முன்னெடுக்கப்பட்டது.

ஊழல் மிகுந்த அரசாங்கமே இது. இந்த அரசாங்கம் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி இப்போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்துக்கு எதிராக பொலிஸாரினால் வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் இந்த நெருக்கடி நிலைக்கு சர்வதேச சமூகமோ அல்லது இந்த நாட்டை சேர்ந்த புலம்பெயர் மக்கள் எமக்கு உதவி செய்ய வேண்டுமானால் இந்த ஊழல் மிகுந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் என சட்டத்தரணிகளினால் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (அ)

## 10 வகை...

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று விரைவில் முன்னெடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட மாகாண...

ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்களை சமூகமளிக்கக்கூடிய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடத்துதல். இந்த விடயம் தொடர்பில் பாடசாலை தமது வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம்.

ஆகவே மாணவர்களின் கல்விக்காக தம்மால் இயன்றளவு ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் தன்னார்வமாக வழங்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாகவும் வரதீஸ்வரன் கேட்டுக்கொண்டார். (ஐ)

## அரசின்...

மைக்கான காரணம் இனவாத, இனவெறிச் செயல்பாடுகளே.

- இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நிலவும் நெருக்கடி மிக்க நிலைமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள அரசியல் கட்சிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார். அதன் மூன்றாம் கட்டம் நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ், புதிய ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நான் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக செயல்பட்டபோது , கட்டார் நிதியத்தின் கிளையொன்றை இலங்கையில் திறப்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பை ஏற்று அதனைத் திறப்பதில் நான் கலந்துகொண்டேன். அன்று அதனை இலக்காகக் கொண்டு எனக்கு எதிராகப் பாரதூரமான விமர்சனங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இனவாதத்தைத் தூண்டி முன்னெடுக்கப்பட்ட பிரசாரத்தின் ஊடாக சமூகத்தினுள் தவறான புரிதலை ஏற்படுத்துவதற்குச் சில தரப்பினர் செயற்பட்டனர். குறுகிய இனவாத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டார் போன்ற நாடுகளை அவர்கள் ஆத்திரமடையச் செய்தனர்.

இவ்வாறு அன்று போராட்டம் நடத்திய குழுவினர் இன்று அந்நாட்டுக்கு எரிபொருளைப் பெறுவதற்காகச் சென்றுள்ளனர். அன்று மோசமாகச் சித்தரிக்கப்பட்ட கட்டார், இன்று எவ்வாறு சிறந்த நாடாக மாறியது?

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் மிக விரைவாகச் செய்ய வேண்டியது தரப்படுத்தல்களில் இலங்கையை முன்னேற்றுவதற்காகப் பொருளாதார மாறுபாடுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று அறிந்து கொள்ளும் எந்தவொரு நாடும், முதலில் செய்தது சர்வதேசத்துடன் முறையானதொரு கொடுக்கல் - வாங்கலை ஏற்படுத்திக் கொண்டமையாகும். எமது நாடு செய்தது அதற்கு முரணான செயற்பாட்டையே ஆகும். எந்தவொரு நாட்டுக்கும் சர்வதேசத்தால் தட்டில் வைத்து நிவாரணம் வழங்கப்படமாட்டாது. அதற்கு முறையான, வெளிப்படையான வேலைத்திட்டம் தேவை" - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்கும் தீர்மானம் கைவிடப்பட்டது!

## அமைச்சர் டக்ளஸ் முயற்சியால் நடந்தது!!

யாழ்ப்பாணம், ஜுலை 02

திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்குவதற்கான தீர்மானம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீடு காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையை தனியார் முதலீட்டாளர்களுக்கு கையளிப்பதன் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக திக்கம் வடிசாலை கொத்தணி நிர்வாகத்தினர் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், குறித்த முயற்சிகளை நிறுத்துமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனையடுத்து துறைசார் அமைச்சருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனியார் முதலீட்டாளர்களும் சம்மந்தப்பட்ட கொத்தணி நிர்வாகத்தினரும் இணைந்த பொறிமுறை ஒன்றின் ஊடாக திக்கம் வடிசாலை அபிவிருத்தி செய்யப்படுமானால் ஆரோக்கிய மானதாக இருக்கும் என்ற கருத்தினை முன்வைத்தார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்தினை ஏற்றுக்கொண்ட துறைசார் அமைச்சர் ரமேஸ் பத்திரன, திக்கம் வடிசாலையை தனியாரிடம் கையளிக்கும் தீர்மானத்தை இடைநிறுத்துவதாகவும், இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து யாரையும் பாதிக்காத வகையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்துள்ளார். (அ)

# படகு மூலம் ஆஸி. செல்ல முயன்ற 506 பேர் மூன்று மாதங்களில் கைது!

கொழும்பு, ஜுலை 02

கடந்த மூன்று மாதங்களில் சட்டவிரோதமாக அவுஸ் திரேலியாவிற்கு செல்ல முயன்ற 506 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஆழ்கடல் பகுதியில் வைத்து 433 பேரையும், கரையோர பகுதிகளில் 5 தடவையில் 73 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் பயணிக்க பயன்படுத்திய 8 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடற்படையினரின் கட்டுப்பாட்டை மீறி சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலிய கடற்பரப்பிற்குள் பிரவேசித்த 91 பேர் கொண்ட குழு, அவுஸ்திரேலிய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அச்சுவேலி-யாழ்ப்பாணம் தனியார் பஸ்கள் இல்லை

## மக்கள் பெரும் பாதிப்பு



யாழ்ப்பாணம், ஜுலை 02

அச்சுவேலி-யாழ்ப்பாணம் தனியார் பஸ் சேவைகள் இடம் பெறாத காரணத்தினால் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு சில பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. டீசல் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தனியார் பஸ் வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

இதனால் தான் போக்குவரத்து சேவையிலிருந்து விலகி உள்ளதாகச் சாரதிகள் கூறினர்.

குறிப்பாக பாடசாலை போக்குவரத்து சேவை, அத்தியாவசிய சேவைகளிலிருந்து தாம் விலகி உள்ளதாக சாரதிகள் குறிப்பிட்டனர்.

இதனால் பஸ் நடத்துநர்களும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். சாரதி, நடத்துநர் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட இவர்கள் தற்போது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரத்தை எவ்வாறு கொண்டு செல்வது என்று தெரியாது நிலையில் தவிக்கின்றனர்.

அச்சுவேலி தனியார் பஸ் சேவையில் 60 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றபோதிலும் தற்போது ஆறு பஸ்களை சேவையில் ஈடுபடுவதாகச் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தாம் கோண்டாவில் பஸ் சாலையில் டீசலை பெறுவதற்காக பல நாட்களாக காத்திருக்கின்றபோதும் தமக்கான டீசல் இதுவரை கிடைக்க பெறவில்லை என்று அவர்கள் கூறினர். (அ-3)

# மீண்டும் சுதந்திரக்கட்சியுடன் இணைந்தார் மேர்வின் சில்வா



கொழும்பு, ஜுலை 02

முன்னாள் அமைச்சரும் மேர்வின் சில்வா மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு சென்று அவரை சந்தித்து, சுதந்திரக் கட்சியின் அங்கத்துவ அட்டையை பெற்றுக்கொண்டுள்ளார்.

மேர்வின் சில்வாவுடன் அவரது மனைவியும் முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்துக்கு சென்றிருந்தார்.

மேர்வின் சில்வா ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்பட்டு வந்தார்.

பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து செயற்பட்டதுடன் முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்களில் முக்கிய அமைச்சு பதவி வகித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் களனித் தொகுதி அமைப்பாளராக இருந்த மேர்வின் சில்வாவுக்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் ரீதியான விரோதங்கள் காரணமாக 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மேர்வின் சில்வாவுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர், அவர் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில், 2019 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்த அவர், அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபட்டார்.

இதனையடுத்து கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அனுராபுரம் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்பட அனைவரும் தோல்வியடைந்தனர்.

இப்படியான பின்னணியில் மேர்வின் சில்வா தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மீண்டும் இணைந்துள்ளார்.

மேர்வின் சில்வா, மைத்திரிபால சிறிசேனவையும் கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




# மரண அறிவித்தல்



வரவு 23.01.1943 பிரிவு 28.06.2022

## எஸ்.ஏ.ஈ.ஏகநாதன்

(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதியும், சிரேஷ்ட சட்டத்தரணியும்)

திரு.எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் கடந்த (28.06.2022) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வரும், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி - விஜயலக்ஷ்மி தம்பதியரின் மருமகனும், சகுந்தலாதேவியின் கணவரும், சிவானந்தா, காலஞ்சென்ற விஜயானந்தா மற்றும் ஜெயந்தி சிவநாதன், வருணானந்தா, விஜயபவானந்தா ஆகியோரின் தந்தையும், கௌரீஸ்வரி சிவானந்தா, முத்துக்குமாரு சிவநாதன், தவநாயகி வருணானந்தா, டிலக்ஷா விஜயபவானந்தா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான காமாட்சி பரமலிங்கம், சிவகாமசுந்தரி சதாசிவம், வாலாம்பிகை அருள்லிங்கம், பராசக்தி சிவநாதன் ஆகியோரின் இளைய சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் சபாநாதன், ஸ்ரீகாந்தா, உஷாதேவி செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சித்தரஞ்சன் (கனடா), சிந்துராரணி (கனடா), நந்தகோபன் (இங்கிலாந்து), சாய்சங்கர் (இங்கிலாந்து), சாயினி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நீலிப்பந்தனையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நாளை (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பமாகி, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் காரைநகர் கசூரினா கடற்கரை அருகில் உள்ள சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்: ந.ஸ்ரீகாந்தா - சட்டத்தரணி




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*



*6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்*
*6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய பலன்*
*7.05 மணி : உளவியல் கருத்து*
*7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி*
*07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை-நேரலை*
*10.30 மணி : TIK TOK*
*11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு*

**பகல்**

*12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)*
*1.00 மணி : மழலைகள் நேரம்*
*1.30 மணி : WEEK END MOVIE- கஜினி*
*04.30 மணி : மனிதனின் மறுபக்கம்*
*05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை*
*6.00 மணி : எதுசரி எதுபிழை-எரிபொருள் யாருக்கு அத்தியாவசியம்*



**இரவு**

*07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு*
*07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி*
*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*09.00 மணி: டான் பட்டிமன்றம்*



*10.00 மணி : நெற்றிக்கண்-சமகால பொருளாதார சிக்கல் தொடர்பில் அரசியல் கட்சிகள் முன்னுள்ள பொறுப்புக்கள்*



## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**

*1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**

*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**

*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஒய்வெடு நிலவே*

**இரவு**

*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

## கல்வி tv CHANNEL-1

**காலை**

*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**

*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

**இரவு**

*7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

## ஐ ரிவி

**காலை**

*5.00மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*7.00 மணி : இன்றைய சிந்தனை*
*7.05 மணி : இன்றைய நாள்*
*7.20 மணி : ஈழத்து சித்தர்கள்*
*7.30 மணி : மங்கள இசை*
*8.00 மணி : அருளுரை*
*8.30 மணி : திருவாசகம்*
*9.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பஜனை*
*10.30 மணி : தமிழககோவில் திருவிழா*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**

*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**

*7.00 மணி : செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*
*8.00 மணி : திருவிழா-01*

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)*
*10.00 மணி: அன்னை மரியா*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)*

**பகல்**

*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)*
*03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*
*07.00 மணி : ஞானவழி*
*07.30 மணி : அன்பியம்*

## Pirai Television

**காலை**

*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**

*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஸ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**

*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*